www.padippakam.com


# கண்ணோட்டம்

കണ്ണോട്ടം KANNOTTAM

ஒரு சமுதாயத்தை ஆயுதங்களும் கொலைகளும் ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டால் அங்கு அறிவும் மனிதாபிமானமும் அடங்கிப்போய்விடும்

தனிச்சுற்றுக்கு மட்டும்

வெளியீடு 02 | 15 மார்ச் 2000 | அன்பளிப்பு ரூபா 10.00


## அரசியல் தீர்வை ஏற்படுத்தப் போவது

# இந்தியாவா! நோர்வேயா!!

**இலங்கையின் அமைதிக்கும் இனங்களுக்கிடையிலான சமாதானத்திற்குமான உறவுக்கும் ஏற்பாடுகள் செய்யும் வகையிலும் உதவுவதற்கென முன்வரும் எந்த ஒரு நாட்டினதும் முன் முயற்சியை நாட்டினதும், மக்களினதும் நன்மைக்காகப் பயன்படுத்துவதை விட்டு விட்டு ஒவ்வொருவரும் எந்த நாட்டைத் தத்தமது குறுகிய இனவாத நலன்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என நினைப்பதே இந்த நாட்டின் தலைவிதியாக ஆகியுள்ள நிலைமை இனியும் ஏற்பட்டுவிடக்கூடாது.**





நோர்வேயின் சமாதான முயற்சிக்கு சிங்கள பேரினவாத அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. ஆனால் சதாகாலமும் இந்திய எதிர்ப்பு வாதத்தினுள் தோய்ந்து போயிருந்த இனவாத சக்திகள் இம்முறை இந்தியா அனுசரணையாளராகச் செயற்படுவதை வரவேற்றுள்ளன.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான காலத்தில் அதற்கெதிராக வீதியில் இறங்கிப் பேயாட்டம் போட்டவர்கள் இந்தியாவின் காலஞ்சென்ற பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களைக் கடற்படை அணிவகுப்பில் வைத்துத்தாக்கியவர்கள் பின்னர் இந்தியா அனுசரணையாளர்களாகச் செயற்படவேண்டும் என்று கூறுவது ஆச்சரியமானதுதான்.

பின்னர் ராஜீவ் காந்தி அவர்கள் தமிழ் பெண் தற்கொலையாளி ஒருவரால் படுகொலை செய்யப்பட்டதும், அதனைத்தொடர்ந்து தமிழகத்திலும், இந்திய அரசியலிலும் ஈழத்தமிழர்களுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச ஆதரவும் இல்லாமல் போனதும் யாவரும் அறிந்ததே.

இந்தியா தமது போராட்டத்திற்கு ஆதரவான நாடு என ஈழத் தமிழ்மக்கள் கருதி வந்தனர். வரலாற்று, கலாச்சார, மொழி ரீதியான உறவுகள் அதற்குக் காரணமாக அமைந்தன. ஆறு கோடித் தமிழர்கள் அண்டை நாட்டில் இருக்கிறார்கள் என்பது பெரும் தெம்பை ஏற்படுத்தும் விடயமாகவே இருந்தது.

இந்தியாவிற்கெதிரான புலிகளின் யுத்தமும், சென்னையில் இந்தியாவின் கீர்த்திமிக்க முன்னாள் பிரதமர் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலும் எல்லாமே ஈழத்தமிழர்பால் இந்தியாவுக்கு கசப்புணர்வையே ஏற்படுத்தியன.

வை.கோ, ராமதாஸ், நெடுமாறன் போன்றவர்களின் ஈழத்தமிழர் ஆதரவு என்பது தமிழ்நாட்டு அரசியலில் பெரும் செல்வாக்குச் செலுத்தக்கூடியதல்ல. தமிழ் நாட்டில் செயற்படும் பிரதான கட்சிகளான திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் நாடு மாநில காங்கிரஸ், அகில இந்திய காங்கிரஸ் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, பாரதீய ஜனதா கட்சி போன்றவை உணர்ச்சி பூர்வமாக இந்தப் பிரச்சினையில் ஈடுபடத் தயாராக இல்லை. புலிகளால் ஏற்படுத்தப்பட்ட கசப்பான அனுபவங்கள் தான் அவ்வாறான நிலைப்பாட்டிற்கு வழிவகுத்தன.

நோர்வேயின் அனுசரணையாளர் நிலைப்பாடு தொடர்பாக இந்திய வெளியுறவுச் செயலர் 'லலித்மான் சிங்' தெரிவித்த கருத்துக்கள்.

1. சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வும்.

2. இலங்கையின் ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும் என்ற

தொடர்ச்சி 8ம் பக்கம்

**உயிர்த்திடல்**

*இலங்கையில் இனம், மொழி, பண்பாட்டுரிசிமூலத்தைக்காண விழைபவர் இந்தியாவையும் உள்ளடக்குவது தவிர்க்க இயலாதது. இந்தியாவின் சமூக வளர்ச்சி பற்றிய காய்தல் உவத்தலற்ற பார்வை இலங்கையின் வரலாற்றைத் தெளிவுற வைக்கும். எங்கள் முன் வரலாறுகள் என வைக்கப்பட்டிருக்கும் ஆரிய வரணாசிரம புனைவுகள், சிங்கள பௌத்த புனைவுகள், சைவத்தமிழ்ப் புனைவுகள் என்பன தாண்டி விஞ்ஞான பூர்வமாக தொல்லியல், சமூகவியல், உற்பத்தி உறவுகள், கல்வெட்டு ஆதாரங்கள், காசியல் எனப் பல துறை அறிஞர்களின் உதவியினூடே வரலாறு எழுதப்பட வேண்டும். இல்லையேல், வரலாற்றுக் கறைகளைத் திரும்பவும் திரும்பவும் இரத்தம் கொண்டே கழுவ மனிதகுலம் முற்படும்!*

# ஐ.தே.க. தேடிக்கொள்ள வேண்டிய பிராயச்சித்தம்

ஐக்கியதேசியக் கட்சி இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சியில் ஒத்துழைப்பு வழங்க முன்வருமானால், அது இந்த நாட்டின் 50 ஆண்டுகால அரசியல் சரித்திரத்தில் ஒரு முக்கியமான திருப்புமுனையாக அமையும்.

இந்த நாட்டில் கொடூரமான மரணங்களுக்கும், இரத்தம் சிந்துதல்களுக்கும் முடிவு கட்டிசமாதான சூழலை உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்ததாக இருக்கும். யுத்தத்தில் சகல இனமக்களுமே களைத்துப் போயிருக்கிறார்கள். அமைதியின் சுவடே அழிந்துபோன தேசத்தில் மக்கள் அதற்கான நம்பிக்கையைக் கொண்டிருக்கின்றார்கள்.

குறுகிய அன்றாடத் தேர்தல் அரசியலுக்காக இனப்பிரச்சினையுடன் விளையாடாமல் இருப்பது பல விலைமதிக்கமுடியாத மனித உயிர்களைக் காப்பதற்குதவும்.

மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் நாகரிக சமுதாயம் பற்றிய நம்பிக்கைகள் இருக்கு



50 ஆண்டுகளுக்கு மேலாகப் போராடி இறுதி 20 ஆண்டுகளிலும் இலங்கையின் ஏடறிந்த வரலாறு கண்டிராத அழிவைத் தமிழ் மக்கள் சந்தித்திருக்கிறார்கள். அதேபோல முஸ்லீம்களும், சிங்களவர்களும் அழிவுகளைச் சந்தித்துள்ளார்கள்.

மக்களே அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுத்தால் சரி என்ற முடிவுக்கு வந்துவிட்ட பிறகு ஐ.தே.க ஊசலாட்டத்தைக் காட்டுவது இந்த நூற்றாண்டுக்குப் பொருத்தமற்ற அரசியலாகும்.

வெவ்வேறு அளவுகளில் சகலருமே பாதிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் ஐ.தே.க தபடத்தன

www.padippakam.com



# புதியதோர் யாழ் நகரம் உதயமாகட்டும்


கடந்த பதினேழு ஆண்டு கால யுத்தம் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அழிவுகளையே மிஞ்சவைத்துள்ளது. மேற்படி ஆக்க பூர்வமானதாக ஆக்கிக்கொள்வது என்பதில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அக்கறை செலுத்துதல் வேண்டும். குறைகளைப்பார்த்துக் குரல் எழுப்புவது மட்டுமல்ல ஆக்க பூர்வமான வழிகளைக் காட்டுவதும் தலைவர்களின் கடமையேயாகும்.

இன்றைய மக்களின் புனர்வாழ்வு மற்றும் சேதமடைந்தவற்றைப் புனரமைத்தல் என்பன ஓர் அரசாங்க நிர்வாக விடயமாகவே கருதப்படுகிறது. முற்றுமுழுதாக அரசாங்க அதிகாரிகளின் கைகளிலேயே விடப்பட்டுள்ளது. ஆனால் தெற்கில் அப்படியல்ல. தெற்கின் ஒவ்வொரு நகரமும் அப்பகுதியின் தேசியத் தலைவர்களின் கருத்துக்கள்-விருப்பங்களின் அடிப்படையில்-விரிவாகக்கொண்டு உருவாகிக்கொண்டிருக்கின்றன.

யாழ் குடாநாட்டில் எங்கு பார்த்தாலும் அழிந்த கட்டிடங்களும் சிதைந்த வீதிகளும் பார்ப்பாரற்று வளர்ந்து கிடக்கும் பற்றைக் காடுகளுமே நிறைந்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் 1980 இற்கு முன்னர் இருந்தது போல இயல்பானதொரு நிலைமையும், மாற்றங்களும் தொடர்ந்து இருந்திருந்தால் இப்போது அதன்படி பதினொரு இலட்சம் பேர் வாழவேண்டும். ஆனால் இப்போது இருப்பதோ வெறுமனே ஐந்து லட்சம் பேர் மட்டுமே உள்ளனர். இன்றுள்ள வகையில் நிலைமை சுமுகமானால் மீண்டும் எட்டு லட்சம் பேர் வாழும் வாய்ப்புள்ளது.





யுத்தம் முடிவுக்கு வரும்பட்சத்தில் ஒரு பெரும் திடீர் பொருளாதார வளர்ச்சிக்கு யாழ்ப்பாணத்தில் வாய்ப்புக்கள் உண்டு. அந்தச் சாதகமான நிலைமையை முன்கூட்டியே அடையாளம் கண்டு அதற்கான அடித்தளங்களை இப்பொழுதே கட்டியெழுப்ப அரசியல் கட்சித் தலைவர்கள் முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

இக்கட்டுரையில் யாழ்ப்பாண நகரை மட்டும் எடுத்து, 1980 ஆண்டு யாழ் நகரை மீண்டும் ஒரு முறை நோக்குவோம். நெருக்கடி மிக்க செறிவான சிறிய நகரம் மாற்றியமைக்க எடுத்த முயற்சிகள் எல்லாம் படுதோல்வி. யாழ் மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதி எங்கும் ஒல்லாந்தர் காலத்து வீதி அமைப்புக்களாலே நிறைந்தது. நவீன வீதி அமைப்புக்கருத்துக்களுக்கு இடமிருக்கவில்லை.

யாழ்ப்பாண நகரங்களுக்கு கடற்கரை என்பது அசிங்கங்களும், பயங்கரமும் நிறைந்த ஒரு பகுதியாகவே இருந்தது. ஒல்லாந்தர் கட்டிய பெரும் கோட்டை இருந்தும் அது நகரோடு இணைந்திருந்த பயமூட்டும் பூதமாகவே இருந்தது. பஸ் நிலையம் வாகனத்தரிப்பிடங்கள் ஆகியவற்றை விரிவுபடுத்த மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியிலேயே முடிவடைந்தன.

யாழ்ப்பாணப் பொது வைத்தியசாலை, பஸ் நிலையம், சந்தைக்கடைகள், வியாபார ஸ்தாபனங்கள், நெருக்கியடிக்கப்பட்ட வாகனங்கள் என்பன ஒன்றுக்கு தேவையான சீரொழுங்கை மற்றையது கெடுப்பதாகவும், ஒன்றைச் சீர்படுத்த முடியாத வகையில் மற்றையது தடையாகவும் அமைந்திருந்தன. நவீன வாகனங்களை இலகுவாகச் செலுத்த முடியாத வகையான ஒழுங்கீன வீதிகளே யாழ்ப்பாணத்தின் பிரதான போக்குவரத்து வீதிகளாக உள்ளன.

மேலே குறிப்பிட்டவைகள் யாழ்ப்பாண நகரைத் தெரிந்தவர்களுக்கு ஒரு சித்திரத்தைத் தரும். இப்போது எங்கும் அழிந்த கட்டிடங்கள், குறைந்த சனத்தொகை இதை எப்படி நல்லதொரு எதிர்காலத்தைக் குறித்து சாதாகமாகப் பயன்படுத்தப்போகிறோம் என்பது தான் எம்முன்னால் உள்ள கேள்வியாகும்.

புனரமைப்பு என்ற பெயரில் இப்போது பழையவற்றை அவை முன்னர் இருந்த இடத்திலேயே அப்படியே கட்டும் முறைதான் கடைப்பிடிக்கப்படுகின்றது. கட்டிடக் கலையில் கூட ஒரு மாற்றம் இல்லை.

பழைய கட்டிடங்களைப் பழைய மாதிரியே பழைய இடத்திலேயே கட்டுவதனால் நாம் பழைய மனிதர்களாகவே புதியவற்றை அறிந்து கொள்ளாதவர்களாகவே புதியவற்றிற்கு எம்மைத் தயார்படுத்தாதவர்களாகவே புதியவை எம்மில் இடம் பெறத் தடையானவர்களாகவே இருக்க நேரிடும்.

சிலவற்றை அப்படியே அதே இடத்திலேயே புதுப்பிப்பது தவிர்க்க முடியாது. அவ்வாறனவை இலங்கையிலேயே தனித்துவம்மிக்க யாழ்ப்பாண மணிக்கூட்டுக் கோபுரம், யாழ் பொதுநூல் நிலையம், யாழ் கோட்டை, பெரும்பாலான கல்லூரிகள் போன்றவை.

ஆனால் ஏனையவை அனைத்துக்கும் புதிதாக நவீன யாழ் நகர திட்டமொன்று உருவாக்கப்படவேண்டும். அதன் அடிப்படையிலேயே எந்தக்கட்டிடமும் அனுமதிக்கப்படவேண்டும்.

1989ம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண அரசாங்கம் எடுத்த முன்முயற்சியின் விளைவாக பிரித்தானிய அரசாங்கம் யாழ்ப்பாணத்தைப் புதிய நவீன நகரமொன்றை திட்டமிடுவதற்கும் அதனை கட்டுவதற்கான நிதி உதவி மற்றும் தொழில் நுட்ப உதவிகளை வழங்குவதற்கும் முன்வந்தது.

ஆனால் பின்னர் ஏற்பட்ட அதே நிலைகள் அந்த எண்ணம் நிறைவேற முடியாத நிலைமைகளை உருவாக்கின. இப்போது மீண்டும் அதற்கான அரிய சந்தர்ப்பம் உள்ளது. உடைந்து சீரழிந்துகிடக்கும் கட்டிடங்களின் சிதைவுகளையெல்லாம் ஒதுக்கிக் கொட்டி யாழ்ப்பாண கடற்கரையின் சில பகுதிகளை மீட்டெடுக்கலாம். விசாலமான நவீன வீதி அமைப்புக்கள் கொண்ட காற்றோட்டமும், சிறந்த இயற்கை சூழலும் நிறைந்த ஒரு புதிய நகரத்தை திட்டமிடல் வேண்டும்.

யாழ் பல்கலைக்கழக விரிவாக்கம், யாழ் வைத்திய சாலை விரிவாக்கம், யாழ் பஸ்நிலைய விரிவாக்கம், கடைத்தெருக்கள், அரசாங்க நிறுவன கட்டிடங்கள் திறந்த வெளிகள், பொது விளையாட்டு மைதானங்கள் நீர் நிலையங்கள், பூங்காக்கள், தனியார் தொழில் நிறுவனங்களுக்கான இட ஒதுக்கீடுகள், பொது வாகனத் தரிப்பிடவசதிகள், நீர்வழங்கல், மின்சார வழங்கல், வடிகால் அமைப்புக்கள் என அனைத்தும் கவனத்தில் எடுக்கப்பட்டு திட்டமிடப்படல்வேண்டும்.

நகரின் ஊடாகச் செல்லும் போது சுகாதாரமும் அடிப்படை வசதிகள் நிறைந்த ஒன்றாகவும், வானிலிருந்து பார்க்கும் போது ஒழுங்கமைக்கப்பட்ட அழகைக்காட்டுவதாகவும், கடலிலிருந்து பார்க்கும் போது பொருளாதார செழிப்பைக் காட்டுவதாக இருப்பதே ஒரு நவீன நகரம்.

சுமார் 10 கிலோ மீற்றர் கடற்கரையைக்கொண்ட யாழ்ப்பாண நகரத்து மக்கள் உல்லாசமாகவோ அல்லது சுகாதார சுகம் தேடி நடமாடவோ, ஒரு துண்டு கடற்கரை கிடையாது இதனை எதிர்காலத்திட்டம் மாற்றியமைக்கவேண்டும்.

யாழ்ப்பாண நகரை திட்டமிட்டு மாற்றியமைத்தால் யாழ் குடாநாட்டின் ஏனைய சிறு நகரங்களும் அதன் தாக்கத்தினால் புதிய மாற்றங்களுக்கு உள்ளாகும். யாழ்ப்பாணத்தின் குடியிருப்பு அமைப்புக்களின் முறைகளிலும் மாற்றங்கள், புதிய ஏற்பாடுகள் உருவாக்கப்படல் வேண்டும். குடியிருப்புக் கட்டிடங்கள் அனைத்தும் திட்டமிடலுக்கும், ஒழுங்கு முறைகளுக்கும் உட்படுத்தப்பட வேண்டும்.

**ராஜபண்டிதர்**

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் இன்று உலகம் முழுதும் நவீன நகரங்களில் பரந்து வாழ்கிறார்கள். நவீன கருத்துக்கள் யாழ்ப்பாணம் சென்றடைவதோ அதனை மக்கள் ஏற்பதோ சிரமமானதாக அமையாது.

இங்கு நவீனம் என்பது கட்டிடங்களின் நிறைந்த காடு ஒன்றை உருவாக்குவதைப்பற்றிக் கூறவில்லை. மாறாக இயற்கை அழகுச் சூழல் மாசுபடாமல் சுகாதாரமான, அடிப்படை வசதிகள், அழகு ஒழுங்குகள், எதிர்கால வளர்ச்சிக்கான இடைவெளிகள் என்பவற்றைக்கொண்டதாகச் சீரமைக்கப்படுதல் வேண்டும்.

தொடர்ச்சி 7ம் பக்கம்


## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

37/2, 1/1, Wimalasara Road,
Kalubowila, Dehiwala.

E.P.I.C., Box No: 95,
95144, Garges Les,
Gonnesse Cedex,
France.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2022

No: 1/1 நெவில் வீதி
திருகோணமலை.
☎ 026 24221

E.P.I.C., Box No: 0362
71603 Ludwigsburg,
Germany.

29A, வாவிக்கரை வீதி-1
மட்டக்களப்பு.
☎ 065 25669

B30, யூ.சி. குவாட்டஸ்
குருமண் காடு,
வவுனியா.
☎ 024 23102

B.M. Box No: 1738,
London - Wcix - 3NN,
U.K.

P - Fach No: 506,
Bern - 17,
Switzerland.

மின் அஞ்சல் முகவரிகள் [E-Mail Addresses]
epic-sl@slt.lk - Colombo
csorg@slt.lk - Jaffna
epiclondon@gn.apc.org - London

படிப்பகம்

www.padippakam.com



# அரசின் புதிய அரசியல் யாப்பு ஆலோசனை நிதி அதிகாரப்பகிர்வு - ஒரு நோக்கு

**மாகாணசபை அமைப்பின் அதிகாரப்பகிர்வு தொடர்பான பிரச்சினையில் இலங்கை மத்திய அரசோடு நேரடி அனுபவம் பெற்ற முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் அவர்கள் வெளியிட்டுள்ள அதிகாரப்பகிர்வு தொடர்பான கைநூலில் இருந்து ஒரு பகுதி**

## நிதி அதிகாரப் பகிர்வு:-

★ உத்தேச அரசியல் யாப்பின் xxi ஆவது அத்தியாயம் நிதியும் நிதி அதிகாரப் பரவலாக்கலும் சம்பந்தமான விடயங்களை விவரிக்கின்றது. உறுப்புரை 207 (4) (a) இன் பிரகாரம் மொத்த, சில்லறை விற்பனைகள் மீதான வரிகள் யாவும் (உற்பத்தியாளர்களினால் (manufactures) மேற்கொள்ளப்படும் விற்பனைகள் தவிர) மத்திய, அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டு அறவிடப்படும். ஆனால் இந்த வரிகள் சம்பந்தப்பட்ட பிராந்திய அரசாங்கத்துக்கு வழங்கப்படும் எனக் கூறப்படுகின்றது.

★ பிராந்தியத்தின் உள்ளே திரட்டப்படக் கூடிய மொத்த, சில்லறை விற்பனைகளுக்கான வரிகள் யாவும் பிராந்திய அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டு அதன் கீழ் இயங்கும் பிராந்திய இறைவரி நிர்வாகத்தினால் அறவிடப்படுதல் வேண்டும். (இந்த விடயம் 13வது திருத்தச் சட்டத்தில் மாகாணங்களுக்கு உரிய அதிகாரம் எனத்தெளிவாகப் பகிரப்பட்டுள்ளது).

★ விற்பனை வரிகளும், கலால் வரிகளும் பிராந்திய அரசாங்கத்துக்கு இறைவரியைக் கொண்டு வரும் பிரதான மூலங்களாகும். எனவே அவ் வரிகளை விதித்து வசூலிக்கப் பிராந்திய அரசாங்கங்களுக்குப் பரவலாக்கப்படவேண்டிய அதிகாரங்களைத் தொடர்ந்தும் மத்திய அரசாங்கம் வைத்திருந்தால், அது நிச்சயம் அதிகாரப் பகிர்வின் அடிப்படையையே பலவீனப்படுத்தி விடும்.

★ இவ் வரிகள் பிராந்திய அரசாங்கத்தின் இறைவரி இயந்திரத்தினாலேயே வசூலிக்கபட வேண்டும். இறைவரி வசூலிப்பு இயந்திரத்தைப் பிராந்திய மட்டத்தில் இயங்க வைக்கச் சிறிது காலம் எடுக்கலாம். அந்த இயந்திரத்தை இயங்க வைப்பதில் பிராந்திய அரசாங்கத்துக்கு உதவ வேண்டியது மத்திய அரசாங்கத்தின் கடமையாகும்.

அது வரை பிராந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் மத்திய அரசாங்கம் ஒரு இடைக்கால ஒழுங்கைச் செய்து கொள்ளலாம். இதற்கு மாறாக, அரசியல் யாப்பு ரீதியாக இறைவரி வசூலிப்பு அதிகாரத்தை மத்தியில் மட்டும் வைத்துக் கொள்வதானது அந்த இயந்திரத்தை பிராந்திய மட்டத்தில் பரவலாக்கவோ அபிவிருத்தி செய்யவோ ஒரு போதும் அனுமதிக்காது.

மத்தியில் ஆட்சியில் உள்ள கட்சியின் சார்பாக இல்லாமல் பிராந்தியத்தில் வேறொரு கட்சி ஆட்சி செய்து கொண்டிருக்கும் போது அந்தப் பிராந்தியத்தின் ஒழுங்கைச் சீர்குலைப்பதற்கு இந்த அமைப்பு பயன்படுத்தப்படும் - பயன்படுத்த முடியும்.

ஆகவே, எந்தவகையிலும் சந்தேகங்களுக்கோ எதிர்பார்ப்புகளுக்கோ இடமின்றி அரசியல் யாப்பின் மூலம் இந்த வரிகள் தொடர்பான அதிகாரங்களும், அவைகளை வசூலிக்கும் அதிகாரங்களும், இறைவரி வசூலிக்கும் நிர்வாக இயந்திரமும் பிராந்தியத்துக்கு சரியான முறையில் வழங்கப்பட வேண்டும்-பகிரப்பட வேண்டும்.

★ பிராந்திய அரசாங்கத்துக்கு இரண்டாவது பெரிய வருவாயைத் தரக்கூடிய மதுபான வகைகள் மீதான வரிகளும் நிதி வருவாய் அதிகாரங்கள் தொடர்பான நிரலில் காணப்படவில்லை.

1978 அரசியல் யாப்பின் 13வது திருத்தச் சட்டத்தின் மூலம் எல்லா மதுபானங்கள் மீதான எல்லா வரிகளும் தெளிவாக மாகாணங்களுக்குப் பரவலாக்கப்பட்டுள்ளன. தற்போதைய உத்தேச அரசியல் யாப்பில் எல்லா உற்பத்திகளுக்குமான கலால் வரிகள் உண்மையில் மறைமுகமாக மத்திய அரசிடமே முடிவுக்கு விடப்பட்டுள்ளன.

### அ. பிராந்தியத்தின் நிதி:-

பிராந்திய அரசு அதன் அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தும் வகையில் அதன் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கு அரசியல் யாப்பில் பிராந்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி அதிகாரங்கள் போதுமானவையாக இருக்கவேண்டும்..

எனவே, தேசிய நிதி ஆணைக்குழுவினால் மத்திய அரசாங்க நிதியத்தில் இருந்து வழங்கப்படும் நிதியுடன், குறைந்தபட்சம் கீழ்க்காணும் நிதி அதிகாரங்களும் உருவாக்கப்பட வேண்டும்:-

a. பிராந்தியத்தின் உள்ளே மொத்த, சில்லறை விற்பனைகளுக்கான வரிகள்.

b. வர்த்தகத்தில் ஈடுபடும் தனியார்கள், கம்பெனிகள், கூட்டுத்தாபனங்கள் என்பனவற்றின் மீதான மூலதன மற்றும் செல்வ வரிகள்.

c. பந்தய வரிகள், மற்றும் பரிசுப் போட்டிகள். லொத்தர் சீட்டுகள் மீதான வரிகள்.

d. மதுபான வகைகள் உற்பத்தி செய்தல், வைத்திருத்தல், எடுத்துச் செல்லல், விற்பனை செய்தல் போன்றவற்றிற்கான வரிகளும், கட்டணங்களும். கள் உற்பத்தி, விற்பனைக்கான (லைசென்ஸ்) அனுமதிக்கட்டணங்கள், மது விற்பனை நிலையங்கள்(Bar) மற்றும் தவறணைகள் போன்றவற்றிற்கான அனுமதிக் கட்டணங்கள் (Licence fees) ஆகிய கலால் வரிகளையும் உள்ளடக்கும்.

e. நாடாளுமன்றத்தால் விலக்களிக்கப்பட்டவை தவிர, மற்றும் உற்பத்திகளுக்கும் தயாரிப்புகளுக்குமான கலால் வரிகள். இந்த விடயத்தில் 50 தொழிலாளர்களுக்கும் குறைவான எண்ணிக்கை கொண்ட எந்தவொரு உற்பத்தி தயாரிப்பு தொழிற்சாலைகளுக்கும் தொழில் நிறுவனத்துக்குமான கலால் வரி விதிப்பு அதிகாரம் பிராந்திய அரசாங்கத்திடம் இருத்தல் வேண்டும்).

f. மோட்டார் வாகனங்களின் பதிவும், லைசன்ஸ் கட்டணமும்.

g. மருந்துகள் மற்றும் ரசாயணப் பொருட்களின் வர்த்தகத்திற்கான லைசன்ஸ் கட்டணமும் வரிகளும்.

h. பிராந்தியத்தின் உள்ளே அசையும், அசையா சொத்துக்களின் இடமாற்றம் தொடர்பான கட்டணங்களும் வரிகளும்.

i. குறிப்பிட்ட வீதிகள், பாலங்கள் மற்றும் அரச சொத்துக்களின் பாவனைக்கான வசூலிப்புக்கள்.

j. விவசாயம் மற்றும் பண்ணை வருமானங்களுக்கான வரிகள்.

k. மத்திய நிரலில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தவிர, ஏனைய விடயங்கள் தொடர்பான எந்தவொரு Act அல்லது Ordinance இன் கீழ் அறவிடப்படும் கட்டணங்களும் குற்றப் பணங்களும்.

l. நீதிமன்றங்களால் விதிக்கப்படும் கட்டணங்களும் குற்றப் பணங்களும், மற்றும் நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களுக்கான முத்திரைக் கட்டணங்களும்.

m. நிறுவனங்கள், அவைகளுக்கான ஒழுங்குபடுத்தல் கட்டணங்கள்.

n. எந்த வகையிலும் நிலத்தின் மீது விதிக்கப்படும் வரிகள்.

o. தனியார்களின் அசையும், அசையா சொத்துக்கள் மீதான வரிகள்.

p. சுரங்கங்கள், கனிப்பொருட்கள் மீதான வரிகளும், லைசன்ஸ் கட்டணங்களும்.

q. தேயிலைத் தோட்டங்கள் தவிர்ந்த ஏனைய தோட்டங்கள் மீதான தோட்டவரிகள் மற்றும் ஏனைய வரிகள்.

r. பிராந்தியத்தின் உள்ளே வருகின்ற அல்லது பிராந்தியத்துக்கு வெளியே செல்கின்ற பொருட்களின் மீதான வரிகள்.

s. எல்லா வகையான வீதி வரிகள்.

t. களியாட்டங்கள், கேளிக்கைகள் மீதான வரிகள்.

u. இரண்டு நிரல்களிலும் கூறப்படாதவை தவிர்ந்த ஏனையவற்றின் மீதான வரிகளும் கட்டணங்களும்.

v. சர்வதேச உதவி நிறுவனங்கள், வெளிநாடுகள், வெளிநாடுகளில் உள்ள தனியார்கள், மற்றும் தனியார் அமைப்புக்கள் ஆகியோரிடமிருந்து பிராந்திய அரசாங்கத்தின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் செயற்திட்டங்களுக்கும் பெறப்படும் உதவிகளும், கடன்களும், நிதிகளும்.

w. பிராந்திய அரசாங்கத்தின் நிதியத்துக்கு வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களால் வழங்கப்படும் நிதியுதவிகளும் பொதுமக்களின் கடன்களும்.

x. பிராந்திய அரசாங்கத்தின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கும், செயற்திட்டங்களுக்கும் என உள்நாட்டில் உள்ள எந்தவொரு தனியாரிடமிருந்தோ அல்லது அமைப்பிடமிருந்தோ வசூலிக்கப்படும் நிதி, கொடைகள் அல்லது பொதுவைப்புக்கள்.

y. மத்திய அரசாங்க நிதியத்தில் இருந்து கிடைக்கக்கூடிய உதவிகளும் கடன்களும்.

z. மத்திய அரசாங்கத்தினால் வசூலிக்கப்பட்ட வரிகளில் நிகர மீதியாகவுள்ள தொகையிலிருந்து பிராந்திய அரசாங்கத்துக்கு மாற்றப்படும் தொகை.

### ஆ. மத்திய அரசாங்கத்தின் நிதி:-

கீழ்க்காணும் நிரல், மத்திய அரசாங்கத்தின் நிதி வரவுக்கான மூலங்களைக் குறிப்பிடுகிறது:-

01. விவசாயம் மற்றும் கமந்தோட்ட வருமானம் மீதான வரிகள் தவிர்ந்த, தனிநபர்கள், கம்பெனிகள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் வருமானத்தின் மீதான வரிகள்.

02. பிராந்திய அரசாங்கம் நிர்ணயித்து வசூலிக்க வேண்டிய கலால்(excise) வரிகள் தவிர்ந்த ஏனைய கலால் வரிகள்.

03. இறக்குமதி ஏற்றுமதி வியாபாரம், வர்த்தகம் மீதான வரிகள் உட்பட சுங்க வரிகள்.

04. தேயிலை, மற்றும் தேயிலைத் தோட்டங்கள் மீதான வரிகளும், இறைகளும்.

05. ஒதுக்கிய நிரலில் உள்ள விடயங்கள் மீதான முத்திரைக் கட்டணங்கள்.

06. பங்குச் சந்தை (Stock Exchange), ஊக வியாபாரம் (Future Market) மீதான வரிகள்.

07. செய்திப் பத்திரிகைகள் மீதான அனைத்து வரிகள்.

08. மத்திய அரசுக்குரிய பகிரங்க நிறுவனங்களில் இருந்து கிடைக்கக்கூடிய வருமானம்.

09. மத்திய நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்திட்டங்களுக்காக உள்நாட்டில் தனியார்களிடமும், அமைப்புகளிடமும் இருந்து பெறப்படும் நிதிகள், கொடைகள் மற்றும் பொது வைப்புகள்.

10. மத்திய அரசாங்க நிதியத்துக்கு வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களிடம் இருந்து பெறப்படும் நன்கொடைகள், கடன்கள் ஆகியன.

11. மத்திய அரசாங்கத்தின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கும், செயற்திட்டங்களுக்கும் என சர்வதேச உதவி அமைப்புகளினாலும், வெளிநாடுகளினாலும், வெளிநாடுகளில் உள்ள தனியார்களினாலும், அல்லது தனியார் அமைப்புகளினாலும் வழங்கப்படும் உதவிகள், கொடைகள்.

12. பிராந்தியங்களில் இருந்து வசூலிக்கப்பட்டு மத்திய அரசாங்கத்துக்கு மாற்றப்படும் வரிகளின் நிகர மீதி.

13. எந்தவொரு நீதிமன்றத்திலும் பெறப்படும் கட்டணம் தவிர ஒதுக்கிய நிரலில் கூறப்பட்டுள்ள மற்ற எந்த விடயங்களின் மீதும் விதிக்கப்படும் கட்டணங்கள்.

★ இங்கு வரிசைப்படுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கையில் ஒப்பீட்டு ரீதியில் மத்திய அரசாங்கத்தில் நிதி வருமானத் துறைகளின் மொத்த எண்ணிக்கை பிராந்திய அரசாங்கத்தின் நிரலில் காட்டப்பட்ட எண்ணிக்கையைப் குறைவாகக் காணப் பட்டாலும், உண்மையில் மத்திய அரசாங்கத்தின் வருமானக் கொள்ளவு எல்லா பிராந்திய அரசாங்கங்களினதும் மொத்த வருமானத்தை விடவும் அதிகமாகும்.

ஏனெனில், அரசாங்கத்தின் வருமானத்தின் பெரும் பகுதியை ஈட்டுகின்ற மூன்று துறைகளான வருமான வரி, சுங்கவரி, மற்றும் பெரும் தொழிற்துறை மீதான கலால் வரிகள் ஆகியன இப்பொழுதும் மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்திலேயே இருக்கின்றன.

ஆகவே, மத்திய அரசாங்கத்தின் வருமானத்தில் கணிசமான பகுதி பிராந்தியங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இது தேசிய நிதி ஆணையம் வருடாந்தம் உருவாக்கும் வழிமுறைக்கும், தேசிய அபிவிருத்தி திட்டத்துக்கும் அமைவாக செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

★ பிராந்திய முறைமை முழுமையாகவும், காத்திரமாகவும், செயற்படக்கூடிய வகையில் உந்தப்படும் வரை, நிலவும் சூழலின் அசாதாரண நிலைமையைக் கருத்தில் கொண்டு, பிராந்திய மக்களுக்கு அந்தப் பிராந்திய அரசாங்கத்தின் மீது நம்பிக்கை ஏற்படும் வகையில், அதன் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மத்திய அரசாங்கம் தேவைக்கேற்றவாறு மேலதிக நிதி உதவியை அக்குறிப்பிட்ட பிராந்திய அரசாங்கத்துக்குச் செய்ய வேண்டியது மத்திய அரசாங்கத்தின் கடமை ஆகும்.

www.padippakam.com





# நல்லவற்றைத் தொலைத்துக்கொண்டிருக்கும் வல்ல தமிழ்ச் சமுதாயம்

நரசிம்மன்

இலங்கைத் தமிழ் சமுதாயத்தை யுத்தம், சண்டைகள், இரத்தம், சாவுகள், கொள்ளையடித்தல், ஏமாற்று ஏஜென்சுக்காரர்கள், கப்பம் வாங்குவோர், சட்ட விரோதமாக வரி வசூலிப்போர், ஒவ்வொரு நிமிடமும் பயந்த வாழ்க்கை, அகதி வாழ்வு, தொழில் செய்யமுடியாத நிலைமை என ஒன்றோடொன்று தொடர்பான சமுகத்தைச் சீரழிக்கும் பின்னோக்கி இழுக்கும் அம்சங்களே காணப்படுகின்றன.

வெளிநாட்டுப் புகலிடம் தேடிப் போயிருக்கும் பல லட்சம் தமிழர்கள் திரும்பவும் தமது சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படாமல் இருப்பதற்கான வழிவகைகளையே தேடுகிறார்கள். செய்தும் கொண்டிருக்கிறார்கள்.

உள்நாட்டில் இருக்கும் இளைஞர்களில் பெரும்பாலானோர் எத்தனை இலட்சம் கொடுத்தாயினும் சரி எப்படியும் விரைவாக வெளிநாடு போய்விட வேண்டும். என மிகுந்த முயற்சியுடன் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

அரைகுறையாகப் பள்ளிக்கூடப் படிப்பை இடை நிறுத்திவிட்டவர்களும், பல்கலைக்கழகப் படிப்புப் படித்துப் பட்டம் பெற்றவர்களும் இந்த விடயத்தில் வேறுபாடு இல்லை.

அறிவுள்ளவர்கள, திறமைசாலிகள், நிபுணர்களாக வரக்கூடியவர்கள் எல்லாம் வெளிநாடுகளில் தற்காலிககூலிவேலை தேடி ஓடுகின்றார்கள்.

கடந்த இருபது ஆண்டுகால யுத்தமும், அரசியலும் இலங்கைத் தமிழர்களை அறிஞர்களற்ற, திறமைசாலிகளற்ற சமுதாயமாக மாற்றிக் கொண்டிருக்கிறது.

தனிப்பட்ட கம்பனிகள்கூட இப்போது தமிழ் இளைஞர்களுக்கு வேலை கொடுக்கத் தயங்குகின்றன. அக்கம்பனிகளின் நிருவாகம் கூறும் காரணங்கள்... தமிழ் இளைஞர்களுக்கு வேலை கொடுத்தால் அவர்கள் எப்போது அந்த வேலையை விட்டு வெளிநாடு போவார்கள் என்று தெரியாது. நாங்கள் சிரமப்பட்டு ஒருவரைப் பயிற்றுவித்துக் கொண்டிருக்கும்போது... பயிற்றப்பட்டவர் திடீரென வேலையை விட்டு விட்டு வெளிநாடு போய்விடுகிறார். இதனால் நாங்கள் புதிது புதிதாக ஆட்களைப் பயிற்ற வேண்டியிருக்கிறது. அது தங்கள் தொழிலுக்கும், தமது நிறுவனத்துக்கும் சிரமமாக அமையும் என வட கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழ் இளைஞர்கள் தெரிவு செய்யப்படுவதில் தவிர்க்கமுடியாமல் தயக்கம் காட்ட வேண்டியுள்ளது எனக் கூறுகிறார்கள். இவ்விடயத்தில் சிங்கள நிறுவனம் தமிழ்ச் நிறுவனம் என்ற பேதம் எதுவும் கிடையாது.

பாதுகாப்புப் பிரச்சினை, சந்தேகம் போன்ற பிரச்சினைகள் என்பதோடு; இப்போது தமிழர்களின் வாழ்விடம் பற்றிய நிச்சயமின்மையும், தமிழ் சமுதாயத்துக்கு எதிராகச் செயற்படுகின்றது.

இதில் யாரைக் குறைசொல்ல.

தமிழ்ச் சமுதாயத்தில் இருக்கும் நிபுணர்கள், அறிஞர்கள் பெரும்பாலும் வெளிநாடுகளிலேயே வாழுகின்றார்கள். நிபுணர்கள், அறிஞர்கள் எப்போதும் சுதந்திரமான, அமைதியான சூழலையே விரும்புவது இயல்பு. துப்பாக்கிகள் மட்டுமே ஆதிக்கம் செலுத்தும் இன்றைய நிலையில் அவர்கள் தமது சமுதாயத்துக்காக வாழ முடியாது போனது மிகவும் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

வெளிநாடுகளுக்குச் சென்று குடியேறி இருப்போரின் அடுத்த தலைமுறையினரிடையே திறமைசாலிகள், நிபுணர்கள், அறிஞர்கள் உருவாகுவார்கள் என்று நம்பலாம். ஆனால் அவர்களின் சேவை எதுவும் அவர்களின் தாய்தந்தையரின் சமுதாயத்துக்குத் தொடர்பற்றவையாகவே இருக்கும்.

அவர்கள் ஒன்றில் கனடியனாகவோ, பிரிட்டிஷ்காரனாகவோ, ஜேர்மனியனாகவோ, பிரஞ்சுக்காரனாகவோ இருப்பார்கள். கொஞ்சம் கொஞ்சமாக தமிழும் அவர்களிடத்தில் இருந்தும் போய்விடும். நாட்டைப் பிரிந்துபோய் வாழும் ஏக்கம், தமிழ் மீதான பற்று என்பதெல்லாம் இப்போது போயிருக்கும் தலைமுறையோடு மட்டும் தான் சம்பந்தப்பட்டது.

தமிழ்ச் சமுதாயத்தைக் காப்பாற்றக்கூடிய முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வதற்கான அரசியல் முறையோ, அரசியல் தலைவர்களோ தமிழர்கள் மத்தியில் இன்று இல்லை. எந்தவொரு சமூகத்திலும் அரசியலில் சமூகத்துக்குப் பாதகமானவர்களும், எதிரானவர்களும் இருப்பதுவும் இயல்பே. ஆனால், இங்கோ சமூகத்தைப் பற்றி அக்கறைப்படாத, சமூகத்தை அரித்து அரித்து வாழுபவர்களே பெரும்பாலும் ஆதிக்கம் செலுத்துபவர்களாக காணப்படுகிறார்கள்.

இருபது ஆண்டுகளுக்கு முன் தமிழர்களின் அரசியலில் வெவ்வேறு துறை சார்ந்த நிபுணர்கள் இருந்தார்கள். அரசியல் சித்தார்த்தங்களில் அறிவு தேர்ந்தவர்கள் இருந்தார்கள். அப்படிப்பட்டவர்கள் இருக்கக்கூடிய, செயற்படக்கூடிய நிலைமைகள் இருந்தன.

கருத்துக்கள் பகிரப்பட்டன. கருத்து மோதல்கள் இருந்தன. ஒவ்வொரு கருத்துக்களும் பகிரங்கமாக விவாதிக்கப்பட்டன. பல்வேறுபட்ட கருத்துக்களையும் தகவல்களையும் பலரும் தெரிந்து கொள்ளும் சூழல் இருந்தது.

ஒரு சமுதாயத்தில் திறமைசாலிகள், அறிஞர்கள், நிபுணர்கள் அந்த சமுதாயத்துக்கு வழிகாட்டுபவர்களாக இருக்க வேண்டுமானால்; திறமை, அறிவு தொடர்ந்து ஒரு சமுதாயத்தில் வளர்ச்சியடைய வேண்டுமானால்; அச்சமுதாயத்தில் ஜனநாயகச் சூழல் வேண்டும். கொலைப்பயமற்ற நிலைமை வேண்டும். நீதி நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை வேண்டும். இன்றைக்கு அந்த நிலை எதுவும் தமிழ் சமுதாயத்தில் கிடையாது.

நாலு அடியாட்களும் நாலு துப்பாக்கிகளும் வைத்திருக்கும் வாய்ப்பும், மக்களை மிரட்டிப் பணம் திரட்டும் வல்லமையும் இருந்துவிட்டால் இன்று அரசியல் தலைவராக ஆகிவிடலாம். அறிவாற்றலோ நல்ல குணாம்சங்களோ இங்கு தேவையில்லை என்ற நிலைமையே உள்ளது.

நல்லவர்களாக இருப்பவர்களை இந்த சமுதாயம் அடையாளம் கண்டுகொள்ளாத நிலைமைகளும்; அவர்களும் தங்களை நல்லவர்கள் நேர்மையானவர்கள் என்று நிருபிக்க முடியாத அளவுக்கு மக்கள் விரோதிகளும், மக்கள் விரோத செயல்களும் ஆதிக்கம் வகிக்கின்றன.

மக்களின் உண்மையான பிரச்சினை என்ன! மக்களின் உண்மையான தேவைகள் என்ன! மக்களுக்கும், தேசத்துக்கும் உடனடியாகவும் நீண்டகால ரீதியிலும் செய்யப்பட வேண்டியவை என்ன! என்ன! என்பன பற்றி மக்கள் மத்தியில் பரந்துபட்ட ரீதியில் கலந்துரையாடல்களோ கருத்துப் பகிர்வுகளோ விவாதங்களோ நடைபெற முடியாத நிலை இருப்பதால்; மக்களின் பிரச்சினைகளில் உண்மையான அக்கறை கொண்டவர்கள், அதன்மீது தெளிவான புரிந்துணர்வு உடையவர்கள் அதை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல முடியாத நிலையில் தமக்குள் முனகிக்கொண்டோ அல்லது மௌனமாகவே இருக்கிறார்கள். வாய் திறந்து சொல்ல முற்பட்டவர்கள் எல்லாம் கொல்லப்பட்டுச் சமூகத்தின் நியாயமான அங்கிகாரம் இன்றிப் போனதாலேயே இந் நிலைமை ஏற்பட்டது.


இலங்கைத் தமிழர் சமுதாயம் அதனால் பல நல்ல அம்சங்களைத் தானே குழிதோண்டிப் புதைத்துக் கொண்டிருக்கிறது. தன் அறிவை அடையாளம் காணும் திறனையும் அது இழந்து நிற்கிறது. இன்றைய கஷ்டங்கள், துன்பங்கள், இழப்புக்களில் பெரும்பாலானவை தமிழ் சமுதாயத்துக்கு உள்ளே உள்ளவர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனால், அதைத் தடுத்து நிற்கும் சக்தி இல்லாமல் சிங்களவர்களையும் சிறிலங்கா அரசையும் குற்றஞ் சாட்டிக்கொண்டிருப்பதன் மூலம் தப்பிக்கொள்ளப் பார்க்கின்றது.

தன்னைத்தானே ஏமாற்றும் நிலையில் இருந்து தமிழ் சமுதாயம் தன்னைத்தானே விடுவித்துக்கொள்ள வேண்டும். ●

# மட்டக்களப்பு விமானப்படைத்தள விஸ்தரிப்புக்கு புதூர் விக்கினேஸ்வரா வித்தியாலயம் இலக்கு

மட்டக்களப்பு விமானநிலையமாக இயங்கி வந்த இடத்திலேயே தற்போது விமானப்படைத் தளம் இயங்கி வருகின்றது. சிவில் விமான நிலையமாக இயங்கி வந்த அந்நாட்களில் இந் நிலையத்திலிருந்து கொழும்பிற்கு பயணிகள் விமான சேவை நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும். அன்றைய நாட்களில் அப்பிரதேசத்தில் சுறுசுறுப்பும் தற்போது அப்பிரதேசத்தின் சோகமும் ஆக்கிரமிப்பு உறுதி செயப்படுவதையே காண்பிக்கின்றது.



இவ்விமான நிலையமானது மட்டக்களப்பு நகரின் கிழக்கே சுமார் 2கி.மீ தொலைவில் மட்டக்களப்பு வாவி நெளிந்து வளைந்து கிடக்கும் ஒரு பக்கமாகவும்; புதூர், வலையறவு, திருப்பெருந்துறை ஆகிய கிராமங்களுக்கு அண்மையில் பரந்து கிடக்கின்றது.

நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு முன்னர் இத்தளத்தில் சிவில் விமான சேவை நடைபெற்ற காலங்களில் இதனை விஸ்தரிக்கும் எந்தவித முன்னேற்பாடும் இல்லை. ஆனால் தற்போது அப்பகுதி வாழ் குடியிருப்புக்கள், வயற்காணிகள், பாடசாலைகள் என்பவற்றைக் காலி செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு அப்பகுதி மக்கள் தள்ளப்பட்டுள்ளதுடன் இது விடயமாக செய்வதறியாது அவர்கள் பரிதவித்துக் கொண்டிருப்பதையும் உணர முடிகிறது.

மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட இம்மாவட்டத்தில் கேட்பாரற்று ஆக்கிரமிக்கப்படும் பகுதியை தட்டிக் கேட்க ஏன் முடியவில்லை என அவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

காணிகளையும், வீட்டுமனைகளையும் விஸ்தீரணத்துக்காக எடுத்த விமானப்படையினர் அம்மக்கள் வாழ்வதற்கான மாற்று இடம் ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதில் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. சுவீகரிக்கப்பட்ட தங்களது இருப்பிடங்களுக்கான நஸ்டஈடு கோரி பல படிக்கட்டுக்களில் ஏறி இறுதியில் சிலருக்கு மட்டும் பாதிக்குப்பக்கமாக நஸ்டஈடு கிடைத்துள்ளது.

அப்பகுதி மக்களில் சிலர் வயல் நிலங்களை நம்பியே தங்களது ஜீவனாம்சத்தை போக்கி வந்தனர். இது விமானநிலையத்துக்கு அண்மையில் இருந்ததால் அந்நிலங்களை விமானப்படையினர் சுவீகரித்து தங்களது தேவைக்காக அதில் நெற்பயிர் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் அப்பிரதேசத்தைப் பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

ஆட்டைக்கடித்து, மாட்டைக்கடித்து, இறுதியில் மனிதனைக் கடிக்கும் கதையாக தற்போது விமானப்படைத்தளத்திற்கு அண்மையாக அமைந்துள்ள புதூர் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தினைக் காலி செய்யும்படி விமானப்படையினர் உத்திரவிட்டுள்ளனர். ஐந்து வருடங்களுக்கு முன்னர் பாடசாலை ஓரம் வரை விமானப்படையினரின் ஆக்கிரமிப்பில் இருந்ததால் பாடசாலை அபிவிருத்தி அன்றிலிருந்து நடைபெறவில்லை.

மேற்படி பாடசாலையானது 2-10-1959இல் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையில் ஆண்டு 1தொடக்கம் ஆண்டு11 வரையிலான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. 305ஆண்களும், 254பெண்களுமாக மொத்தம் 559 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

இப்பாடசாலையானது 2பேர்ச் பரப்பளவை கொண்டது. இதில் 955.8 ச. யார் பரப்பில் நான்கு கட்டிடங்ளையும் (இதில் ஒன்று மாடிக்கட்டிடம்) மற்றும் 2766ச.யார் பரப்பில் விளையாட்டு மைதானத்தினையும் கொண்டுள்ளது.

24ஆசிரியர்களைக் கொண்ட இப்பாடசாலையினை வேறு இடத்துக்கு உடனடியாக மாற்ற அவர்கள் கோரிக்கை விடுப்பது எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு கோரிக்கையாகும். அவர்களது பாதுகாப்பைக் காரணம் காட்டிச் செய்ய முற்படுவது என்பது இளம் மாணவச் செல்வங்களின் மனங்களில் வீணான சிந்தனைகளை விதைத்து அவர்களது கல்வி வளர்ச்சியைப் பாழடையச் செய்யும் ஒரு பாதகச் செயலாகும்.

கல்விச் செல்வமே மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிக்கும் ஒரு விடயமாகும். இதனைத் துளிகூட நினைக்காமல், மதிக்காமல் இப்படி நடந்து கொள்வது தொடர்பாக அனைத்து தமிழ் அரசியல் கட்சிகள், சமூக நலன்விரும்பிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பெற்றோர், பொதுஸ்தாபனங்கள் பொறுப்புடனும் அக்கறையுடனும் செயற்பட்டு இதனைத் தடுப்பதற்கான அனைத்துக்காரியங்களிலும் இறங்கி மாணவர்களின் எதிர்காலத்தினை பாதுகாக்க முன்வரவேண்டும்.

--காண்டீபன்--

படிப்பகம்

www.padippakam.com



# வசந்தம் வருமா!!

ஒரு காலத்தில் இவர்கள் வீடுவீடாகச் சென்று பிச்சை எடுப்பதே பிரதான பிழைப்பாகச் செய்துகொண்டிருந்தனர். சிலர் சாத்திரங்கள் சொல்வதும் உண்டு. (ஆனால், சாத்திரம் சொல்வதே பிரதான தொழிலாகக் கொண்ட வேறு ஒரு இனக் குழுவினரும் உண்டு) வேட்டையாடுதல் இவர்களது பாரம்பரிய தொழிலாக இருந்து வந்துள்ளது. இதற்காக நாய்களைப் பழக்கி தமக்குக் கூடவே வைத்திருப்பார்கள். கட்டுத்துப்பாக்கியால் காட்டில் சகல மிருகங்களையும் வேட்டையாடுவதில் மிகுந்த தீவிரமாகச் செயற்படும் இவர்கள் மிகப் பிரதானமாக உடும்பு வேட்டையிலேயே ஈடுபடுவார்கள். நாய்களைக் கொண்டு மிகக் கச்சிதமாக உடும்பு வேட்டையாடும் இவர்களது பிரதான உணவு இறைச்சி ஆகும்.

உடும்பு பிடிக்கும் தொழிலோடு, பாம்புகளையும் பிடித்துப் பழக்கி பாம்பாட்டிகளாகவும் கிராமத்துக்கு வந்து பிழைப்பு நடாத்திக் கொண்டிருந்தார்கள். பாம்புகளை மயக்குவதற்காக மூலிகை வேர்களை வைத்திருக்கும் இவர்களில் சிலர் காட்டிலுள்ள மருத்துவ செடிகள் சம்பந்தமான அறிவையும் பெற்றிருந்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று, திருக்கோவில் பகுதிகளிலேயே இவர்களது இருப்பும் பிழைப்பும் இருந்து வந்துள்ளது. ஒரு வகையில் இவர்கள் நாடோடி இனக்குழுவினரின் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதும்; எமது நாட்டின் புவியியல் அமைப்பு, போக்குவரத்து என்பன இவர்களது இருப்பை ஒரு குறுகிய பகுதியை அண்டி வாழச்செய்து விட்டது எனலாம். வனக்குறவர் சமூகத்தைச் சேர்ந்த இவர்கள் "குறவர்கள்" என்றே அழைக்கப்படுகிறார்கள்.

1966-1970 அளவில் இவர்களது வாழ்க்கை நெறிமுறைகளை அவதானித்த கிறிஸ்தவ பாதிரியார் குக் என்பவர் இவர்களை அளிக்கம்பை என்னுமிடத்தில் குடியமர்த்த அரும்பாடுபட்டார். நாய்களைக் கொண்டு காட்டிலே வேட்டையாடியும், மகுடி ஊதிப் பாம்பாட்டியும், பிச்சை எடுத்தும் வாழ்ந்து வந்த இவர்களது பழக்க வழக்கங்களையும், பாரம்பரியங்களையும் ஒரு குறுகிய காலத்துக்குள் மாற்றி இவர்களை ஒரு நாகரீகமான மனித சமுதாயமாக மாற்றுவதில் மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்ட பாதிரியாரின் நம்பிக்கை வீண்போகவில்லை. அப்போது இவர்களில் 148 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.

அதுவரை கொத்துக் குடிசைகளுக்குள் வாழ்ந்து வந்த இவர்களுக்கு அரசு, பொதுநிறுவனங்கள், கிறிஸ்தவ அமைப்புக்கள் உதவிகளோடு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. கல்வி என்ற சொல்லுக்கே எத்தனை எழுத்துக்கள் என்று தெரிந்திராத இவர்களது பிள்ளைகளுக்கு முதல் முறையாக பள்ளிக்கூடமும் அமைத்து கொடுக்கப்பட்டது. அத்துடன் ஒரு கூட்டுறவுச் சங்கமும் கிறிஸ்தவ தேவாலயமும் அமைக்கப்பட்டது.

நாகரீக உலகில் நாடோடிக் கூட்டங்களாகத் திரிந்த அந்த இனக்குழுவினரின் வாழ்வில் மறுமலர்ச்சி தோன்றத் தொடங்கியது. எப்படியெல்லாமோ பிழைப்பு நடத்தி வாழ்ந்து வந்தவர்கள் சொந்தமாக உழவு இயந்திரம் வாங்கி வேளாண்மை செய்யும் அளவுக்கு அவர்களது உழைப்பும், ஊக்கமும் இருந்தபோதுதான்...

நீண்ட பேரினவாததீயின் நாக்குகள் இந்த தளிர்களையும் விட்டுவைக்கவில்லை. 1985-1990 அளவில் தொடர்ந்த பயங்கரவாதப் பிரச்சினைகளின் விளைவாக இவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுப் போனார்கள்.

பலர் படுகொலை செய்யப்பட்டதோடு, படுகாயங்களுக்கும் உள்ளானார்கள். குருவிக்கூடு கலைக்கப்பட்டதுபோல் தமது வீடுவாசல்களை இழந்து, கொஞ்சங் கொஞ்சமாகச் சேர்த்து வைத்திருந்த சொத்துக்கள், ஆடுமாடுகள், பயிர் வளங்கள் அத்தனையும் இழந்து ஒரு நாளிலேயே அகதிகளாய்ப் போனார்கள்.

சொந்த நாட்டிலேயே அகதிகளாய் ஆக்கப்படுவதொன்றும் இலங்கைச் சமூகவாழ்வில் புதிய விடயம் இல்லையென்றாலும்... ஒரு சமூகம் புதியதொரு வாழ்வைத் தொடங்கும்போது இந்நிலைமை ஏற்பட்டதும், கடந்த பத்துவருடங்களுக்கும் மேலாக கேட்பாரற்ற ரீதியில் இன்னும் மீளக் குடியமர்த்தப்படாமலும் இருப்பதுதான் வேதனைக்குரியது..

சுமார் 175 குடும்பங்களைக் கொண்ட 800 பேர் அம்பாறை மாவட்டத்தில் உள்ள திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கள்ளியந்தீவு என்னுமிடத்தில் இன்னும் அகதிகளாகவே காலந்தள்ளுகின்றார்கள்.

ஏனைய சமூகத்தவர்களுடன் எந்தவொரு குடும்ப உறவுகளையும் கொண்டிராத இவர்களது அவல வாழ்க்கை தொடர்கதையாகப் போவதற்கு அரசியல்வாதிகளினதும், அதிகாரிகளினதும் அக்கறையின்மையே காரணமாகும்.

குறைவான தமிழ் வாக்குகளை (60,000) கொண்ட அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் வெற்றி தோல்வியைக் கூட நிச்சயம் இவர்களது வாக்குகள் நாளை தீர்மானிக்கலாம். சுமார் 600 வாக்குகளைக் கொண்ட இவர்கள் தேர்தல் திருவிழாக் காலங்களில் மட்டும் உள்ளூர் அரசியல்வாதிகளால் பகடைக் காய்களாக்கப்படுகின்றனர்.

1994ல் நடந்த பொது தேர்தலில் கூட ஒரு சுயேச்சை அணியினரால் இவர்களது சமூகத்தைச் சேர்ந்த ஒருவரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட வைக்கப்பட்டார்.

படிப்பறிவற்ற இவர்களது பிள்ளைகள் அண்மைக்காலமாகவே தான் படிப்பு வாசனையை நுகர்ந்துள்ளனர். இச்சமூகத்தைச் சேர்ந்த ஒரு சிலரே க.பொ.த சாதாரண தர பரீட்சையும் எழுதியுள்ளனர். நடைமுறையில் தமிழையே பேசும் இவர்களது தாய் மொழிக்கு எழுத்து வடிவம் கிடையாது. இந்திய மொழிகளான தெலுங்கு, உருது போன்றவற்றையே இவர்களது மொழி ஒத்திருக்கும். உருக்கேறிய உடல்வாகு கொண்ட மிகுந்த உழைப்பாளிகளான இவர்கள் மத்தியில் வெற்றிலை போடும் பழக்கமும், மதுபானம் அருந்தும் பழக்கமும் வெகுவாகக் காணப்படுகிறது.

தமது சொந்த இருப்பிடத்திலிருந்து சுமார் பதினைந்து கிலோமீட்டர் தூரத்துக்குள்ளேயே கடந்த பத்து வருடத்துக்கும் மேலாக அகதிகளாக வாழும் தங்களை மீளக்குடியேற்றுமாறு அதிகாரிகளுக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சர் பெருமக்களுக்கும் இதுவரை காலமும் கோரிக்கை விடுத்தும் அவை அத்தனையும் செவிடன் காதில் ஊதிய சங்காகவே ஆகிப்போனது.

-வமஹாரான்-

இவர்கள் மீளக்குடியமர்த்தப்பட அரசியல்வாதிகளின் கடைக்கண் பார்வைக்குக்கூட வழியில்லாமல் இருப்பது ஒருபுறமிருக்க இவர்களது மாதாந்த நிவாரணப் பொருட்கள் வழங்கப்படுவதில் சுயலாபம் தேடிக்கொள்ளும் அதிகாரிகளும் இவர்கள் மீளக்குடியமர்த்தப்படுவதில் அக்கறைகாட்டுவதில்லை எனவும் பேசப்படுகிறது.

எது எப்படியிருந்தபோதும் கைவிடப்பட்ட நிலையில் கடந்த பத்து வருடத்துக்கும் மேலாகப் புதர் மண்டிக்கிடக்கும் இவர்களது சொந்த காணிபூமிகள் இவர்களது வருகைக்காகத் தவம் கிடக்கிறது. தங்கள் சொந்த காணிபூமிகளை விட்டு வெளியேறியதால் தங்கள் சமூகத்தின் வாழ்நிலை இருப்புக்கள் எத்தனை மடங்கு பின்னோக்கித் தள்ளப்பட்டுள்ளது என்பதைக்கூட அறியாதவர்களாகவே காலந்தள்ளுகிறார்கள்.

இவர்கள் 1966-1986 காலகட்டங்களில் பாடுபட்டுக் காடுவெட்டி வேர்பிடுங்கி வேளாண்மை பயிர்வளம் செய்த காணிபூமிகள் இன்று வல்லோரால் அத்துமீறி அபகரிக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளும் காணப்படுகிறது. படிப்பறிவில்லாத இவர்கள் தாங்கள் உருவாக்கிய காணிபூமிகளுக்குரிய ஆவணங்களைச் (பெர்மிட்) சரியான முறையில் பேணாததினால் இன்று சூழ உள்ளவர்கள் இவர்களது காணிகளைக் கபளீகரம் செய்தும் உள்ளனர்.

எல்லோருக்கும் பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாத நிலையில் அடையாள அட்டையைக்கூடப் பெற்றுக்கொள்ளாதவர்கள் உள்ளனர். சோதனைச் சாவடிகளில் இவர்களைச் சட்டென அடையாளம் கண்டுகொள்ளும் உள்ளூர் பொலிஸ் இராணுவத்தினர் அவ்வளவு கெடுபிடிகளைச் செய்வதில்லை. இன்னும் கிறிஸ்தவ தேவாலய பீடங்களே இவர்களுக்கு உதவுவது மட்டுமல்லாது கலைநிகழ்ச்சிகள், திருவிழாக்கள் போன்றவற்றிலும் இவர்களை ஈடுபடுத்தி சாதாரண வாழ்வுக்கு உதவுகின்றனர். கிறிஸ்தவ பீடங்களின் உதவிகளோடுதான் இச்சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் பலர் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகளும் எழுதியுள்ளனர்.

இச்சமூகத்தவர்கள் மட்டுமல்லாது 1985-1990 காலகட்டத்தில் இப்பகுதிகளை அண்டிய எத்தனையோ தமிழ்க் கிராமங்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. கூடுதலானவர்களின் பிரதான சம்பாத்தியம் சேனைப்பயிர், விவசாயம், ஆடுமாடு கோழிவளர்ப்பு, விறகு வெட்டுதல் என்பனவற்றிலேயே தங்கியிருந்தது.

சாகாமம் பகுதியில் 120 குடும்பங்களைக் கொண்ட 500 பேர்களும், கஞ்சிகுடியாறு பகுதியில் 230 குடும்பங்களைக் கொண்ட 1000 பேர்களும், தங்கவேலாயுதபுரம் பகுதியில் 350 குடும்பங்களைக் கொண்ட 1350 பேர்களும், இவற்றுள் அடங்கும்.



கால ஓட்டத்தில் பொன்விளையும் பூமிகளாக மாற இருந்த இவர்களது விவசாய நிலங்கள் இப்போது காடு மண்டித் தரிசு நிலங்களாகவே காணப்படுகிறது.

இப்பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பரந்துபட்ட சமூகமாக இருப்பதால், உறவினர்கள், நண்பர்கள் உதவிகளோடு வாழ்க்கையை ஓட்டுகிறார்கள். இவர்கள் எல்லோருமே மீளக்குடியமர்த்தப்பட்டுச் சகஜவாழ்வுக்குத் திரும்பவேண்டும். அம்பாரை மாவட்டத்தில் இதுவரை எத்தனையோ இலட்சங்களில் மீள்குடியேற்ற மாதிரிக் கிராமங்கள் அமைக்கப்பட்டுவிட்ட போதிலும் இவர்கள் ஏறெடுத்துப் பார்க்கப்படாதது ஏனென்று புரியவில்லை.

புதியதொரு சமூக வாழ்க்கையைத் தொடங்கும்போது விரட்டியடிக்கப்பட்டுக்– கடந்த பத்து வருடத்துக்கும் மேலாக ஓர் அடிமைச் சமுதாயம்போல், மனித மந்தைக்கூட்டமாக வாழும் இந்த வனக்குறவர் இன மக்களின் நிலை மிக பரிதாபத்துக்குரியதே. ●

---

## மலையகம்

# பாதுகாப்பற்ற கட்டிடத்தில் ஆசிரியர் பயிற்சி....??

நாட்டின் பல பாகங்களிலும் ஆசிரியர்களுக்கான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இருந்த போதும் மலையகத்தில் ஆசிரியர் பயிற்சிக்கான ஒரு நிரந்தரமான கட்டிடம் இல்லை.

பதின்மூன்று வருடங்களுக்கு முன்பு தலவாக்கொல்லை தமிழ் மகாவித்தியாலய கட்டிடத்தின் ஒரு பகுதியில் இயங்கிய அரசினர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை தற்போது மத்திய மாகாணத்தின் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கொட்டக்கொலை நகரிலிருந்து மூன்று கி. மீற்றர் தூரத்தில் யதன்சைட் தோட்டத்தில் உள்ள தேயிலைத் தொழிற்சாலை ஒன்றிலேயே இயங்கி வருகின்றது.

ஆசிரியர்கள் தங்குவதற்கான தங்குமிட வசதிகளோ குடிநீர் வசதியோ போக்குவரத்து வசதியோ, இல்லாமை முக்கிய குறைபாடாகும். இங்கு நிரந்தரக் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கக் கோரி ஆசிரியர்களின் உண்ணாவிரதப் போராட்டத்திற்குப் பின்பு கொட்டக்கொலை "கொமர்சல்" என்ற இடத்தில் கட்டிடம் நிர்மாணிப்பதற்கு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரை கல்வியமைச்சோ அல்லது உதவி வழங்கும் அரசசார்பற்ற பொது நிறுவனங்களோ இக்கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குரிய ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாதது கவலைக்குரியதாகும். இக்கட்டிடம் அங்கு அமைவதை விரும்பாத சில சக்திகள் இக்கலாசாலையை சிறிபாத கல்விக் கலாசாலையுடன் இணைப்பதற்காக மேற்கொண்ட முயற்சிகளும் மாணவர்களின் போராட்டத்தினால் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இக் கலாசாலை உரிய காலத்தில் அமைக்கப்படுமானால் அப்பகுதி ஆசிரிய மாணவர்கள் பெரும் நன்மை அடைவார்கள்.

எனவே உரியவர்கள் இக்கட்டிடம் அமைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பெற்றோர்கள் மாணவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

நுவரெலியா

www.padippakam.com



# எதிர்கால வாழ்க்கையை சீரழிக்கும் உயிர்கொல்லி கசிப்பு

நாகரீகம் என்ற போர்வையில் இன்று நவீன உலகில் பெரும்பாலான மக்கள் போதைக்கு அடிமையாகி தங்களைத் தாங்களே அழித்துக் கொள்கின்ற நிலையை நாங்கள் அறிந்து கொள்கின்றோம்.

ஐரோப்பிய நாடுகளில் மது, சிகரட், பிரவுன் சுகர், வைட் சுகர், கொக்கெயின், அபின், ஊசிமூலம் போதை ஏற்றுதல் போன்றவற்றைப் பல வழிகளில் பெற்று மகிழ்ந்து கொள்கின்றனர். இவற்றின் பெறுமதியோ கோடிக்கணக்கான அமெரிக்க டாலர்களாகும். இதை அரசியல்வாதிகளும், பெரும் வியாபாரப் புள்ளிகளும் தங்களுக்குரிய ஏஜென்டுகளை வைத்து உயிர்கொல்லியை விற்பனை செய்கின்றனர். இதில் பெண்களையும் ஈடுபடுத்திக் கொள்கின்றனர்.

நாசகார நடவடிக்கைகளில் இவர்களின் பங்கு ஏகபோக உரிமை கொண்டதென்பதை மக்கள் அறியாமல் இல்லை. இவர்களின் கயமைத்தனத்துக்கெதிராக மக்கள் ஏதும் செய்ய முடியாத நிலையானது இவர்கள் அரசியல், பொருளாதார சக்தியை தம்வசம் கொண்டிருப்பதை வெளிக்காட்டுகிறது. மக்கள் சக்தி இவர்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்கு வைத்திருப்பதற்குப் பதிலாக இந்த சக்திகள் மக்களை தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றன.

ஐரோப்பிய நாடுகளைப் போல ஆசிய நாடுகளிலும் சனத்தொகை அதிகரிப்புக்கு ஏற்ப பெரும் உயிர்கொல்லி பாவனை வேகமாக பரவிவிட்டது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களிடம் இவர்களின் வியாபாரம் எளிதில் எடுத்துச் செல்லக்கூடியது. உற்பத்தி செய்யப்படும் கசிப்பு, கஞ்சா போன்றவை தாராளமாகப் பாவனையில் கிடைக்கின்றன.

இவ்வாறாக மலையகத்தின் பல பகுதிகளிலும் செறிவுகூடிய மலிவுவிலை கசிப்பு தாராளமாக மக்களின் பாவனைக்குக்கிடைக்கின்றன. இது பெரும்பாலும் பெரும்பான்மை மக்களின் கிராமப்பகுதிகளையும், ஒதுக்கப்பட்ட மலைப்பகுதிகளையும், தேயிலைத்தோட்டப்பகுதிகளையும் ஒன்றிணைக்கும் இடங்களிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன.

குறிப்பாக பசறை, பதுளை, ஹாலிஎல, பண்டாரவளை, ஹப்புத்தலை, ஹல்துமல்ல, பலாங்கொடை, எட்டியாந்தோட்டை, ஹேவாஹெட்ட பகுதிகளிலும் நாவலப்பிட்டி நகரத்தை அண்டிய தோட்டப்பகுதிகளிலும் உற்பத்தி செய்து வேறு தோட்டங்களுக்கும் கொண்டுசெல்லப்படுகிறது. இதற்குரிய மூலப்பொருட்களான பழைய இரும்பு, சீனி, மோர்ட்டீன் கொசுவர்த்திசுருள், யூரியா, கழிவுச்சர்க்கரை போன்றன மலிவாக கிடைக்கின்றன. உற்பத்தி செய்யப்பட்ட பொருளை இடத்திற்கிடம் மாற்று வதற்கும், கொண்டு செல்லவும், மலைப்பாதைகள் இயற்கையாகவே அமைந்துள்ளன. கசிப்பை வாங்கி அருந்தி மகிழ்ந்து சீரழிந்து செல்பவர்கள் எமது சமூகத்தைச் சார்ந்த தொழிலாளர்களின் ஒருபகுதியேயாகும்.

இவர்களின் பலயீனமான உடம்புக்களைப்புக்கு மலிவான உடனடி புத்துயிர் ஊட்டும் போதைப்பொருளாகும். இவற்றைச் சற்று ஆழமாகச் சிந்தித்தோமேயானால் இதுவும் எமது சமூகத்தின் மீது மேற்கொள்ளப்படுகின்ற திட்டமிட்ட பிரித்தாளும் முயற்சியாகும் எனக்கருத வேண்டியுள்ளது. இது சமூகச் சீரழிவுகளைத் தோற்றுவிக்கிறது எனத் தெரிந்தும் உரியவர்களால் உரிய தடை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமைக்கு என்ன காரணம்?



எமது சமூகத்தினர் விழிப்புணர்வுடன் செயற்பட்டால் இந்த சமூக விரோத வியாபாரத்தை முறியடிக்க முடியும். மலையக தொழிலாளர்கள் மத்தியில் சிந்தனை எழுச்சி தோன்றினால் குழு நிலைபோராட்டம் போல் அல்லாமல் பாரிய மக்கள் எழுச்சிக்கு இவர்கள் முகம் கொடுக்க வேண்டிவரும் என்பதை இவர்கள் அறியாமல் இல்லை.

கடந்த தேர்தல் காலங்களில் மலிவு விலை போதைப் பொருளை வறிய மக்களுக்கு வழங்கி தங்களுக்குரிய வாக்குகளையும், வாக்காளர் அட்டைகளையும், பெற்றனர் என்பதும் இந்த போதைப் பொருள் சில பிரதேசங்களில் உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் மூலப் பொருளாகவும் விளங்கியது.

மேலும் மலையகத்தின் பெரும்பாலான இளைஞர்கள் தொழிலின்மையால் கொழும்பு-கண்டி போன்ற நகரங்களில் தொழில் புரிகின்றனர். இவர்களில் பல நூற்றுக்கணக்கானவர்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டு அழியும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இவர்களுடைய பழக்கம் தொடர்ச்சியாக மலையகத்தின் பல பகுதிகளிலும், ஊடுருவியுள்ளது. இவற்றிற்கெல்லாம் சாதகமாக மலையகத்தின் நகர்ப்புறங்களிலும் சிறிய கடைத்தொகுதிகளையுடைய பகுதிகளிலும் முன்னர் இருந்த ஓரிரு சாராயக்கடைகள் தற்போது மூன்று மடங்குகளாக அமைந்துள்ளன.

இந்தச் சாராயக்கடை உரிமையாளர்கள் முகவர்களூடாக தோட்டப்பகுதிகளுக்கு சாராயப் போத்தல்களை விற்பனை செய்து விடுகின்றனர். சமூகம் எப்படி அழிந்து போனாலும் தங்களுக்குத் தேவை இலாபம் மட்டுமே. இவற்றையெல்லாம் நோக்கும் போது சில உருப்படியான காரியங்கள் மலையத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆரோக்கியத்துடன் உடல், உளரீதியாக கல்வி அறிவு பெற்ற சமூகமாக மலையக சமூகம் உருவாக்கப்படல் வேண்டும். அந்தந்த பிரதேசங்களில் அரசாங்கமானது, தொழிற்சாலைகளை உருவாக்கி வேலை வாய்ப்புக்களையும் வழங்க வேண்டும்.

அன்று தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்களுக்கு ஆசை வார்த்தை காட்டியே அழைத்து வந்தனர்.

"மண்ணைக் கிண்டினால் மாசி கிடைக்கும் வேண்டியளவு தேங்காயும் கிடைக்கும்" "கப்பல் ஏறி கண்டிக்கு போனால் கைநிறைய காசு கிடைக்கும்" என்ற கதைகளே நினைவுக்கு வருகின்றன.

இன்று கசிப்பு வழங்கினால் வாக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையை சில அரசியல் கட்சிகள் கொண்டிருக்கின்றன.

இவ்வாறாக சுய சிந்தனையை மழுங்கடித்துச் சமூகச் சீரழிவுகளை ஏற்படுத்தும் போதைப்பொருட்களில் ஒன்றான திருட்டுத்தனமான கசிப்பு உற்பத்தியைத் தடை செய்யவும், உற்பத்தியாளர்கள் மீது தீவிர தகுந்த சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சமூக நலனில் அக்கறையுடையோர் கவனம் செலுத்த வேண்டும். இளைஞர்களுக்கு, இதை எவ்வாறு தடுக்கலாம் என்பது சம்பந்தமாகவும், இதன் பாவனையால் ஏற்படும் தீய விளைவுகள் பற்றியும், சமூகத்தின் பொருளாதார வீண்விரயம் பற்றியும் விளங்கப்படுத்தல் அவசியம். சமூக மாற்றத்திற்கான மாற்று வழிகளைக் கையாள்வதோடு பள்ளி மாணவர்களுக்கும் அறிவுரை வழங்குவதும் சிறப்பானதாகும்.

ராஜ்குமார் மஸ்கெலியா

---


## சர்வதேச மகளிர் தினம்

# கோட்பாடுகளும் யதார்த்தங்களும்

ஒரு 10 வருடத்திற்கு முன்னர் சர்வதேச மகளிர் தினம் பெற்றிருந்த முக்கியத்துவத்தை விட இன்று பெண் விடுதலை, பெண் உரிமை தொடர்பான இயக்கங்கள் வளர்ச்சி பெற்றிருப்பது முக்கியமான அம்சமாகும்.

கடந்த நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலிருந்து இந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதி வரை பெண்களின் உரிமை சுதந்திரம் தொடர்பான தீவிர கருத்தாடல்களுக்குரிய களமாகவும், போராட்டங்களாகவும் இருந்ததென்றால் அது மிகையல்ல. மறுபுறம், தொழில் துறைகளின் வளர்ச்சியுடன் இருபாலாரும் உற்பத்தியில் ஈடுபட வேண்டியிருந்ததால் சமூக ஏற்றத் தாழ்வுகளை கட்டிக்காக்கும் புதிய ஆதிக்க சக்திகளும் ஓரளவு பெண் சுதந்திரத்தை ஆதரித்தன.

ஆனால் இந்தப்பாரிய நிறுவனமயப்பட்ட அமைப்புக்களுக்கப்பால் பெண்விடுதலைக்காகப், பெண்கள் சுதந்திரமாக அணிதிரள வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. அதாவது சுதந்திரப்பெண்கள் இயக்



கம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. சோஷலிசப் புரட்சி அல்லது தேசிய ஜனநாயகப் புரட்சி பற்றிப் பேசிய இடதுசாரிகள் கட்சியின் சோஷலிச வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாகவே பெண் விடுதலையையும் கருதியிருந்தனர்.

மேலும், பல ஆயிரம் ஆண்டுகளாக உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் அடிமைப்படுத்தப்பட்ட பெண், அந்த மனோபாவத்திற்குள்ளாகிய பெண் சுதந்திரம் பெறுவதற்கான உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை. அவ்வாறே, சோஸலிஷ வேலைத்திட்டமும் கொண்டிருக்கவில்லை என்பது பல பெண்ணியலாளர்களின் கருத்தும் அனுபவமும் ஆகும்.

குடும்பம், தனிச்சொத்து, அரசு என்ற தனது புகழ் பெற்ற நூலில் பெண் எவ்வாறு அடிமைப்படுத்தப்பட்டாள் என்பதை "பிரடெரிக் எங்கல்ஸ்" தெளிவுபடுத்தினார். இந்த மார்ச்சு 8 இல் சர்வதேசப்பெண்கள் தினத்தை பிரகடனம் செய்த "கிளாரா செட்கி"னும் ஐரோப்பாவில் முன்னேறிய தொழிலாளி வர்க்கத்தின் புரட்சியுடன் பெண் சுதந்திரம் பெறுவாள் என்ற இலட்சியக் கனவுடன் வாழ்ந்தவர்.

15வருடங்களுக்கு முன்னர் பெனாசிர் பூட்டோ அவர்கள் பாகிஸ்தானிய அரசியலில் எழுச்சி பெற்றுயிருந்தார். தென்னாசிய இடதுசாரிகளின் நிகழ்சி நிரலில் ஜனநாயகப்புரட்சி என்ற ஒரு விடயம் இருக்கின்றது. அப்படியென்றால் இஸ்லாமிய அடிப்படைவாதத்தில் ஊறித்திழைத்த நாட்டில் ஒரு பெண் பிரதமராவதை, பெண் விடுதலைக் கண்ணோட்டத்தில் ஜனநாயகப் புரட்சியின் அம்சம்



வருகையில் இங்கிலாந்து வாழ்க்கை பின்புலத்தை வைத்து மேற்கத்தைய பெண் விடுதலை அபத்தமானது. என்று பாகிஸ்தானிய இடதுசாரிகள் குரல் எழுப்பினார்கள். உண்மையில் அங்கு அவர்களை அறியாமல் அவர்களின் மனங்களில் உறைந்து கிடந்தது இஸ்லாமிய அடிப்படை வாதத்தின் மிச்ச சொச்சங்களே.

இது தொடர்பாகப் பல பெண் விடுதலையாளரும் பேராசிரியருமான குமாரி ஜெயவர்த்தனா அவர்கள் நியாயமாகவே ஒரு கேள்வி எழுப்பி என ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பது அவரது கேள்வி.

இதேபோல் சோஷலிச நாடு உருவாகும் போது தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும் என இனத் தனித்துவக் கோரிக்கைகளே பிற்போக்கானது எனக்கருதிய இலங்கையின் பாரம்பரிய இடதுசாரிகள், இன்றைய ஜே.வி.பி போன்ற அமைப்புக்கள் சொல்வதைப்போலவே சோஸலிசம் வரும்வரை பெண்விடுதலையை ஒத்திப்போடுவதும் தவறானது.

தொடர்ச்சி 07ம் பக்கம்

www.padippakam.com



# சமாதானத்துக்கான மக்கள் பேரணி

## மட்டக்களப்பு

இடையறாத மக்கள் கொடூரங்களால் பேரிழப்புகளையும் அழிவுகளையும் சந்தித்த மட்டக்களப்பு மக்கள் சமாதானத்துக்கான தமது விருப்பத்தை ஒரு மாபெரும் மக்கள் பேரணியூடாக வெளிக்காட்டினர்

இந்த அழிவுகளும், மரணங்களும் அவர்களுக்கு சலிப்பையும் விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளன. அன்றாட வாழ்வில் இந்த யுத்தம் பதித்துள்ள தடங்களை நாளாந்தம் காணமுடியும். மட்டக்களப்பு நகரம் காலை பத்து மணிக்கு இயங்கத் தொடங்கி மாலை நான்கு மணிக்கெல்லாம் வெறிச்சோடிவிடும் இடமாக மீன்பாடும் தேன்நாடு மாறியுள்ளது.

தொலைதூர கிராம மக்கள் தமது அன்றாட அலுவல்கள் தமது உற்பத்திப் பொருட்களைச் சந்தையில் விற்றல் தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுச் செல்லுதல் என்பன நரகவேதனையையே ஏற்படுத்தும் அனுபவமாகும்.



இந்த தடங்கள் கல்வி, சுகாதாரம், தொழில் போக்குவரத்து என வாழ்வின் சகல துறைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

அதனால்தான் அவர்கள் சமாதானத்துக்கான வேட்கையை, தாம் தமது சொந்த நிலத்தில் கௌரவமாக சுயமரியாதையாக வாழ்வதற்கான தமது அபிலாசையை வீதியிலிறங்கி வெளிக்காட்டினார்கள். அரசியற்கட்சிகள், தொழிற்சங்கங்கள், மனித உரிமை அமைப்புக்கள், மாணவர்கள், பெண்கள் என சமூகத்தின் பல தரத்தாரும் இந்த சமாதானப் பேரணியில் பங்கு பற்றியது ஒரு சிறப்பம்சமாகும்.

இந்தப் பேரணியில் வேண்டாம்! வேண்டாம்! யுத்தம் வேண்டாம்! வேண்டும் வேண்டும் சமாதானம் வேண்டும்! எமக்கு, தேவை சுதந்திரம், எமக்குத் தேவை ஐக்கியம்! எமக்குத் தேவை சமாதானம்! அரசே மட்டக்களப்பு மாவட்டத்தில் பாஸ் நடைமுறையை ரத்துச் செய்! இனப்பிரச்சினை தீர மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை! அரசு புலிகள் பேச்சுவார்த்தையை உடனே தொடங்கு.! இனவாத சக்திகளை முளையிலேயே கிள்ளியெறி! அரசே பேரினவாதச் சக்திகளை உடனே தடை செய்! என்ற கோசங்கள் மட்டக்களப்பு நகரை அதிரவைத்தன.

அரசடிச் சந்தியிலிருந்து மகாத்மாகாந்தி சிலைவரை நடைபெற்ற பேரணியில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழீழ விடுதலை இயக்கம், அரச சார்பற்ற பொது நிறுவனங்கள், மண்முனைப்பற்று பிரதேச அபிவிருத்திச்சபை, வர்த்த சங்கம், வடக்கு-கிழக்கு முஸ்லீம் காங்கிரஸ், ஆட்டோ சாரதிகள் சங்கம், தொழிற்சங்க அமைப்புக்கள், கிராம அபிவிருத்திச்சங்கங்கள், மகளிர் அமைப்புக்கள், மீனவர் சங்கங்கள், தனியார் போக்குவரத்துச் சங்கங்கள், சிகை அலங்காரச்சங்கம், சலவைத் தொழிலாளர் சங்கம், விளையாட்டுக்கழகங்கள் பங்கு பற்றின.

இந்தப் பேரணித் தொடர்பாக வெளியிடப்பட்ட பிரசுரத்தில்

**நம்பிக்கையில்லா**

**தேசத்தின் நட்சத்திரங்களே**

**எழுக!**

**உங்கள் அக்கினிச் சுவாலையில்**

**அநீதிகள் அழிந்து**

**நீதியின் தளிர்கள் துளிர் விடட்டும்!**

இந்தப் பேரணியினர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்கான மகஜரை மட்டு அரசாங்க அதிபரிடம் கையளித்தனர். சர்வதேச தூதரகங்களுக்கும் இது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்கள் 50ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி அதிகாரங்களிலிருந்த அரசாங்கங்களால்திட்டமிட்ட ரீதியில் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளனர். இதன் விளைவுகளே இன்று நாடு எதிர் நோக்கும் யுத்த சூழ்நிலைகளாகும்.

தமிழ் பேசும் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பாக தீர்வுகாண முயற்சிக்கப்பட்ட போதெல்லாம் பேரினவாத சக்திகள் இவற்றைத் திட்டமிட்டு குழப்பியதன் விளைவாக அவை நடைமுறைக்கு வராமலேயே தோல்வியில் முடிவடைந்தன.

தமிழ் பேசும் மக்கள் இனிமேலும் அடக்கு முறையையும், துன்ப துயரங்களையும் தாங்கிகொள்ளும் சக்தியற்றவர்களாக உள்ளனர். இத்தகைய இக்கட்டான காலக்கட்டத்தில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியாக நோர்வே அரசாங்கம் அனுசரணையாளராக வந்துள்ளது.

இந்த நல்ல சந்தர்ப்பத்தைத் தொடக்கமாகக் கொண்டு அரசும் புலிகளும் பேச்சுவார்த்தை ஒன்றில் ஈடுபட்டு தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சமாதானத்தைக் கொண்டுவர செயலாற்ற வேண்டுமென இச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறோம்


### கோரிக்கைகள் பின்வருமாறு

1. சமாதானச் சூழல் உருவாக நோர்வே அரசின் அனுசரணையோடு அரசு புலிகள் உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.

2. இச் சமாதான முயற்சியில் ஈடுபாடு கொண்டு செயலாற்றி வரும் நோர்வே அரசின் செயற்பாடுகளுக்கு எதிராகச் செயற்படும் பேரினவாத சக்திகள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

3. ஆளும் கட்சி தீர்வு முயற்சியொன்றில் ஈடுபடும் போது எதிர்க்கட்சிகள் அதனைச் சீர்குலைக்கும் முயற்சிகளிலேயே கடந்த காலங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். அத்தகைய போக்கைக் கைவிட்டு அரசும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக ஒன்றுபட்டு ஒத்துழைக்க வேண்டும்.

4. மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள பாஸ் நடைமுறையைக் கைவிட வேண்டும்.



5. தமிழ் மக்களிடையே நல்லெண்ணத்தைக் காட்டும் ஒரு முயற்சியாக தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்படும் சகல மனித உரிமை மீறல்களும் நிறுத்தப்பட உடனடியாக யுத்த நிறுத்தம் ஒன்று நடைமுறைக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

இந்த மகஜரில் க.நவரெத்தினம் முன்னாள் தவிசாளர் மண்முனைப்பற்று, செ. தங்கராசா ஈ.பி.டி.பி, பா. கிருஸ்ணகுமார் ரெலோ, க. பாக்கியராசா புளொட், ந.நேசராசா ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகியோர் கையெழுத்திட்டிருந்தனர். ●

---

## சர்வதேச மகளிர்......... 06ம் பக்கம் தொடர்ச்சி

இந்த இரண்டு கருத்துக்களும் பெண்ணியலாளரான குமாரி ஜெயவர்த்தனா அவர்களால் அடிக்கடி வலியுறுத்தப்பட்டவை. இவை பெண்விடுதலை தொடர்பான கருத்துக்களின் கோட்பாடுகளில் ஏற்பட்ட புதிய வளர்ச்சி எனலாம். சுதந்திர பெண்கள் அமைப்பு என்ற கருத்து பாரியளவில், உலகளாவிய பிரபலமான இயக்கமாக பரந்தளவில் பெண்களை அவ்வாறே அணிதிரட்டி இருப்பது உண்மையே.

இதில் உலகளாவிய அளவில் மாறுபாடுகள் வேறுபாடுகள் இருப்பதும் உண்மையே. பெரும் தேசிய இன மேலாதிக்கவாத பெண்கள் அமைப்புக்கள், சேவா வனிதா போன்றவை, அதே போல் குறுந்தேசியவாத பெண்கள் அமைப்புக்கள், நிறபேதம் பாராட்டும் பெண்கள் அமைப்புக்கள், சாதிப்பாரபட்சம் காட்டும் பார்ப்பனியப் பெண்கள் அமைப்புக்கள் எனப் பலவிதமான பெண்கள் அமைப்புக்கள் செயற்படுகின்றன.

பெண்கள் என்ன விதமாக அடக்கப்படுகிறார்களோ ஒடுக்கப்படுகிறார்களோ அதனையே நாசுக்காக, மென்மையாகச் செய்வதை ஆதரிக்கும் பெண் அமைப்புக்களும் உண்டு. அவற்றிற்கெனச் சஞ்சிகைகள் சங்கங்கள் எல்லாமே உண்டு.

தொழிற்துறையின் வளர்ச்சி எவ்வாறு பெண்களையும் அதில் ஈடுபடுத்துவதன் மூலம் மூலதனத்தை பெருக்கலாம் உபரிமதிப்பை உருவாக்கலாம் எனக்கருதப்பட்டதோ அதேபோல்தான் யுத்தவாதிகள் தமது யுத்தத்திற்கு ஆட்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்குப் பெண்களை அதில் ஈடுபடுத்தி சமத்துவத்தை உறுதிப்படுத்தியிருக்கிறோம் என்று பாசாங்கு செய்கிறார்கள்.

இங்கு பெண்கள் கருவிகள் மட்டுமே. தீர்மானங்கள் எடுப்பதில் கலந்துரையாடல்களில் அவர்கள் பங்காளர்கள் அல்ல. உத்தரவுகளுக்கு கீழ்ப்படிபவர்கள் அவர்கள். அடுத்து அரச சார்பற்ற நிறுவனங்கள் பெண்களின் வாழ்க்கை மேம்பாடு அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு அதன் உயர்பீடத்தில் உள்ளவர்கள் விதவைப்பெண்களுக்கும் கிராமத்துப் பெண்களுக்கும் பரோபகாரம் செய்பவர்களாகவும் அதில் தங்களையிட்டு பெருமிதப்பட்டுக் கொள்பவர்களாகவும் இருக்கின்றார்கள். இவர்கள் ஒரு கிராமத்திற்கு ஒரு நாள் சென்றுவிட்டு வந்தாலே வானத்திற்கும் பூமிக்கும் இடையில் குதிப்பார்கள்.

தமது மேற்தட்டு அணிக்குள் தனது பேரத்தை நடத்துவதற்கு இவர்கள் இந்த முகமுடியை அணிகிறார்கள். அதுமாத்திரமல்ல, இந்த அரச சார்பற்ற நிறுவனங்களில் பலவற்றுக்கு கிடைக்கும் நிதியுதவிகள் முறையாகப் பகிரப்படுவதில்லை. எவ்வாறு சில இயக்கங்கள் பல கோடிக்கணக்கான ரூபாய்களை கப்பமாக மக்களிடம் வாங்கி விட்டு சில ஆயிரம் ரூபாய்களை ஏழைகளுக்கு விட்டெறிகின்றார்களோ அதேபோல் தான் இவர்களும் செயற்படுகின்றார்கள். "பசு மாட்டில் பால் கறப்பதற்கு இடைக்கிடை கன்றைக் கிட்டக் கொண்டு போவது" போன்றதுதான் தான் இவர்களின் வேலையும்.

இடதுசாரிகளைப் பொறுத்தவரை தென்னிந்தியாவில் ஈ.வெ.ரா. தலைமையிலான திராவிட இயக்கத்தை பொறுத்தவரை அவர்கள் இதயசுத்தியுடன் பணியாற்றியது கண்கூடு. தீண்டாமை ஒழிப்பு வெகுஜனப் போராட்டங்கள் மற்றும் தொழிலாளர்களின் தொழிற்சங்கக் கோரிக்கைகள், விவசாயிகளின் போராட்டங்களின் போது இடதுசாரித் தலைவர்கள் ஒரு கால கட்டத்தில் மக்களுடன் இரண்டறக் கலந்து நின்றவர்கள்.

ஆனால் இந்த அரசசார்பற்ற நிறுவனங்களில் ஏழைகளுக்கு நிவாரணம் அளிப்பவர்கள் என்று கூறுபவர்களோ அல்லது பெண்விடுதலை என்று கூறுபவர்களோ வேறொரு வாழ்க்கை முறையைக் கொண்டவர்கள். பெண்களின் பிரச்சினைகள் தொடர்பாக வடகிழக்கில் வேலை செய்யும் சில அரசசார்பற்ற நிறுவனங்களில் நாம் இதை எளிதாக அவதானிக்க முடியும்.

இந்த நிலைமைகள் களையப்பட்டு இந்த நாட்டின் அடிமட்டத்தில் உழலும் பெண்கள், யுத்தத்தின் பிடியில் அகப்பட்டு அல்லல்படும் பெண்களின் சுதந்திரத்திற்காக உண்மையான அடிமட்டத்துப் பெண்களின் பிரச்சினைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்கள் உருவாக்கப்பட் வேண்டும்.

அல்லாமல் கொழும்பில் சில பெண்கள் கமிட்டிகள், வடகிழக்கில் சில முகவர்கள், கொழும்பில் இருப்பவர்களுக்கு வடகிழக்கு எப்படி இருக்கும் என்றே தெரியாது. இத்தகைய போதாமையைக் கொண்டவையாகவே அரச சார்பற்ற நிறுவனங்கள் இருக்கின்றன.

அந்த அடிப்படையல இங்கு கொள்கை உறுதியை விட பணம் சேர்ப்பதற்கான உறுதியே அதிகமாக இருக்கும். பணம் பண்ணுபவர்கள் இடைஞ்சல் இல்லாமல் எவ்வாறு பணம் பண்ண முடியுமோ அவ்வாறு செய்வதைத் தான் விரும்புவார்கள். எங்கு எந்த சக்தி ஆதிக்கத்தில் இருக்கிறதோ அதனுடன் சமரசம் செய்து கொள்வார்கள். தமது பெண்விடுதலை கருத்துக்களையும் அதற்கேற்றாற்போல் திரித்துக் கூறுவார்கள்.

இவற்றுக்கப்பால் பெண்கள் தொடர்பான சில அரச் சார்பற்ற நிறுவனங்கள் ஆக்கபூர்வமான காரியங்களை மறுப்பதற்கில்லை. ஆனால் இவ்வகையில் பெண்விடுதலை அமைப்புக்கள் பெண்ணியம் தொடர்பாக விரிவான கலந்துரையாடல்களை நடாத்துவதும் சுதந்திரமாகச் செயற்படுவதற்கான வாய்ப்புக்களை கண்டறிவதும் முக்கியம். ஏனெனில் பெண்விடுதலை என்ற பெயரில் செயற்படும் சக்திகளின் நிறுவன பலமும், நிதி பலமும் உண்மையான பெண் விடுதலையாளர்களை முகமற்றுப் போகச் செய்துள்ளன.

ஞானசிறீ

---

## புதியதோர்.......

2ம் பக்கம் தொடர்ச்சி

யாழ்ப்பாண மாநகரசபையில் உள்ள உறுப்பினர்களின் பிரதான கடமையாக அது அமைய வேண்டும்.

அது மாகாண அரசோடும், மத்திய அரசோடும், மற்றும் புனரமைப்புக்கான உதவிபுரியும் வெளிநாடுகளின் தூதுவர்களோடும் பேச்சுவார்த்தை நடத்தி இந்த காரியத்துக்கு அடித்தளம் இட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் வாய்ப்புள்ள இன்றைய சந்தர்ப்ப சூழ்நிலை பயன்படுத்தப்படவேண்டும். எமது மக்களின் எதிர்காலத்திற் காக நாம் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். ●

www.padippakam.com



வவுனியா

# அகதி முகாம்களில் சீரழியும் சிறுவர் வாழ்க்கை



சிறுவர்களின் பாதுகாப்பு, சிறுவர்களின் உரிமைகள், சிறுவர்கள் துஷ்பிரயோகம் தொடர்பாக ஐ.நா சிறுவர் நலன்புரி அமைப்புக்கள் பல சட்டங்களை இயற்றி உள்ளன.

எமது நாட்டிலும் சட்டங்கள் உண்டு. ஆனால் இந்த நாட்டில் சிறுவர்கள் துஷ்பிரயோகம் என்பது பல்வேறு வழிகளிலும், பாரதூரமான பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

யுத்தம் சிறுவர்களை அநாதைகளாக்கியுள்ளது. பாதுகாப்பற்ற நிலையையும் உருவாக்கி உள்ளது. அவர்கள் யுத்தத்தின் கருவிகளாகவும், யுத்தத்தின் பக்கவிளைவாக பெற்றோரின் இறப்பினால் அநாதை நிலையை, குடும்பங்களின் இடம்பெயர்வால் அகதி நிலையையும் அடைந்துள்ளனர்.

உல்லாசப் பயணத்துறையின் பக்கவிளைவாக தென்பகுதி கரையோரக்கிராமங்களில் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாவது அன்றாடம் பத்திரிகைகளில்



வரும் செய்தி. அதுமாத்திரமல்லாமல் யுத்தம் நடைபெறும் பகுதிகளில் பெண்கள் மாத்திரமல்ல சிறுவர் சிறுமியரும் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளான அதிரவைக்கும் செய்திகளை நாம் அறிந்திருக்கின்றோம்.

தென்னாசிய அளவில் இந்தியாவின் பெரும் நகரமான மும்பாயில் சிறுவர்கள் தம் உரிமைகளுக்காக சங்கம் அமைத்து செயற்படுகிறார்கள். பாகிஸ்தானின் சிறுவர்களின் உரிமைகளுக்காக போராடிய சிறுவன் ஒருவன் படுகொலை செய்யப்பட்டிருக்கிறான்.

நாட்டின் வருங்கால சந்ததியான செல்வங்களான சிறுவர்கள் பாதுகாக்கப்படவேண்டும்.

*அமிழ்தினும் ஆற்ற இனிதே*
*தம்மக்கள் சிறுகை ஆழாவிய கூழ்*
*என்கிறார் வள்ளுவர்.*

எமது மரபுகள் பாரம்பரியங்களிலேயே இந்த பிஞ்சுகள் பற்றிய உயர்வான மதிப்பீடுகள் உண்டு. சிறுவர்களால் பிசையப்பட்ட உணவு அமுதத்திலும் இனிமையானவை என்றே வள்ளுவர் தமது ஈரடிகளில் குறிப்பிடுகிறார்.

*விளையும் பயிரை*
*முளையில் தெரியும்*
*என்பது எமது பழமொழி*

தந்தையோடு கல்வி கற்போம். தாயொடு அறுசுவை போம் என்பது ஆணாதிக்க வகைப்பட்ட அம்சங்களை உள்ளடக்கி இருப்பதே ஆயினும் சிறுவர் சிறுமியருக்கு பெற்றோரின் அன்பும் பரிவும் ஆதரவும் அவசியம்.

ஆனால் வவுனியா அகதி முகாம்களில் சிறுவர்களின் வாழ்வு விசனத்தையும் அடங்காத் துயரத்தையும். ஏற்படுத்துவதாக இருக்கிறது.

தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா கருகத்திருவுளமோ என்பதுபோல் தான் நிலமை.

தமிழ் பிரதேசங்களில் தொடர்ச்சியான யுத்த அனர்த்தங்களால் 15வருடங்களுக்கு மேலாக இடம் பெயர்ந்து கொண்டிருக்கும் மக்களின் ஒரு பகுதியினர். 1990 ஆம் ஆண்டு தொடக்கம். இன்று வரை வவுனியாவின் பல்வேறு நலன்புரி நிலையங்களிலும் புகலிடம் தேடியுள்ளார்கள். இவ்வாறு 20ஆயிரம் பேர்வரை சொல்லொணா வேதனைகளுடன் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் மத்தியில் இருக்கும் சிறுவர் சிறுமியர். எதிர்காலத்தில் எதிர்நோக்கப்போகின்ற பயங்கர நிலையைக் கோடிட்டுக்காட்டுவதாக அதிர்ச்சியான சில தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.

ஒரு புறம் யுத்தக்கொடுமையினால் கல்வி கற்கமுடியாத சூழ்நிலை நிலவினாலும் இன்னொரு புறம் இவர்களின் கல்விக்கு சமூகப்பொறுப்பு சொல்லவேண்டியவர்கள். பாராமுகமாக இருக்கிறார்கள் என்பது துரதிஸ்டம் வாய்ந்த உண்மையே.

15வயது வரைக்கும் கட்டாயக்கல்வி என்பது சட்டத்தில் இருந்தாலும் இவர்களைப்பொறுத்தவரை அது பயன்படாத ஏட்டுச்சுரைக்காயாகவே இருக்கிறது.

இந்த சிறுவர்களுக்கு படிக்க வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது. இவர்களது பெற்றோர்களுக்கு அவர்களின் பிள்ளைகளை படிப்பிக்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. வறுமையும், வசதியின்மையும் திக்கற்ற நிலையும் இந்த கல்விச்செல்வத்தை பெறுவதற்கு தடையாக அமைகின்றன.

கல்வியை மூலதனமாக கருதும் ஒரு சமூகத்தில் தமது பிள்ளைகள் கல்வி கற்க முடியவில்லை என்பது எவ்வளவு மனவேதனையை ஏற்படுத்தும் விடயம் என்பது எவரும் இலகுவில் விளங்கிக்கொள்ளக்கூடியதே.

வவுனியா அரச நிர்வாகமும், யு.என்.எச்.சி.ஆர்., ஐ.நா சிறுவர் பாதுகாப்பு நிதியம் போன்றவை இவர்களின் கல்விக் கண்ணைத் திறப்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டாலும் அவை யானைப்பசிக்கு சோழப்பொரி போன்றுதான் இருக்கிறது.

ஒரு சிறுவனோ, சிறுமியோ மாணவராக வரவேண்டுமென்றால் பின்வரும் தடைகளை எதிர்நோக்க வேண்டியிருகிறது.

1. ஏற்கனவே பாடசாலை சென்றிருந்தால் கல்வி கற்ற பாடசாலையின் அனுமதிப்பத்திரம் தேவை.

2. பாடப்புத்தகங்கள், சீருடைகள், பாதணிகள் தேவை.

3. முகாமில் இருந்து பாடசாலை செல்லும் மாணவர்களை பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் பாரபட்சமாக அணுகுவதால் இந்த மாணவர்கள் தாழ்வுச்சிக்கலுக்கு உள்ளாகி வெறுப்பும் விரத்தியுமடைகின்றனர்.

4. முகாமில் போதிய உணவு கிடைக்காமை. அதனால் போசாக்கின்மை, வெளிச்சம், இடவசதியின்மை ஆகிய கற்பதற்கான நிபந்தனைகள் ஆகியன பிரச்சினைகளாக இருக்கின்றன.

5. பாஸ் நடைமுறை அவர்களின் சுதந்திரமான கல்விக்கு இடையூறாக இருக்கின்றது. ஒரு அரைச்சிறை நிலையில் இருந்து கற்கும் நிலமை.

6. கடந்த காலத்தில் ஏற்பட்ட மறக்க முடியா சம்பவங்களின் ஆழமான வடுக்கள் எதிர்காலத்தில் நம்பிக்கையின்மை ஆகியன ஆழமான மனப்பதிவுகளை ஏற்படுத்தியுள்ளன.

7. இத்தனை இன்னல்களையும் துன்பங்களையும் தாண்டி சராசரி மனிதர்களாக வாழ்வதற்குப் போராட வேண்டிய நிலமைகளால் கல்வியில் நாட்டங்கொள்ளாத அல்லது கல்வியை இழந்த சிறுவர்கள் தங்களின் பசியைப் போக்குவதற்கும், ஏனைய தேவைகளைப்பூர்த்தி செய்வதற்கும் தமக்கு தெரிந்த வழிகளை தேடிக் கொள்கிறார்கள். இங்குதான் சீரழிவு அதன் உச்சக்கட்டத்தை தொடுகிறது.

கூடுதலான அகதிமுகாம்கள் நகரை அண்மித்து இருப்பதால் காலையில் முகாமில் இருந்து வரும் இவர்கள் பிச்சை எடுப்பது, பெரியவர்களைப்பார்த்து பசிக்கிறது பணந்தாருங்கள் என்று கேட்பது, சிறு தொகைப்பணத்திற்காக அடிமை வேலைகளைச் செய்தல், சந்தைகளுக்குச் சென்று அரிசி மரக்கறி போன்ற பொருட்களை இனாமாக வாங்கி மற்றவர்களிடம் விற்றுப் பணத்தை எடு த்து தனது செலவுகளைப் பூர் த்தி செய்வது இன்னும் சிலர் சிறிய திருட்டுக்களில் ஈடுபடுவது, புகைத்தல், மது அருந்துதல் போன்ற சமூக சீர்கெட்ட பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகுதல் இவர்களிடையே அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

குடும்பங்களின் தனித்துவங்கள் பாதுகாக்கப்படாத நெருசலான முகாம் சூழ்நிலையில் சிறுவர்களின் குணாம்சங்களை இழந்து முதிர் நிலை அடைவது, பாடசாலை சென்று கல்வி கற்பதை விட அவர்களின் வாழ்நிலை இத்தகைய விடயங்களில் ஆர்வமூட்டுவதாக இருக்கிறன. கையறு நிலையில் உள்ள பெற்றோர்கள்.

இத்தகைய போக்கை கட்டுப்படுத்துவது அவர்களின் சக்திக்கப்பாற்பட்டு இருப்பதால் அவர்களின் போக்குக்கே விட்டுவிட்டார்கள். இது மிக மிக ஆபத்தான தோற்றப்பாடாகும். என்னதான் மோசமாக இருந்தாலும் பெற்றோரும் தமது பிள்ளைகளின் எதிர்கால நல்வாழ்வில் அக்கறை காட்ட வேண்டும்.

ஒரு புறம் அழிவு என்ற கருமேகத்தால் சூழப்பட்ட இன்றைய எமது சமூகம் இன்னொரு புறம் எதிர்காலத்தையே சூனியமாக்கி விடக்கூடிய பயணத்தை நடத்திக்கொண்டு இருக்கிறது.

எமது சமூகம் எத்திசையில் சென்று கொண்டிருக்கிறதென்பதை இச்சிறுவர்கள் தொடர்பில் எமது சமூகச்சிந்தனையாளர்களும், எமது பெற்றோரும், தமது மனங்களை நோக்கி தீவிரமாக கேட்க வேண்டிய கேள்வியும், அவசரமாக செய்யவேண்டிய காரியமுமாகும்.

உலகின் இன்னுமொரு பகுதி அறிவின் உச்சங்களை, உன்னதங்களை தரிசித்துக்கொண்டிருக்கையில் நமது சிறுவர்களின் ஒருபகுதியினர் நடுத்தெருவில் நின்றுகொண்டிருக்கிறார்கள்.

இது போன்ற சமூகப்பின்னடைவுகளுக்கு யுத்த சூழ்நிலையின் இயல்பு என்று கூறிவிட்டு இருந்துவிடாமல் அரசும், அரசு சார்பற்ற நிறுவனங்களும், அரசியல் கட்சிகளும், மனித உரிமை அமைப்புக்களும் இச்சிறுவர்களை இந்த ஆபத்தான நிலையிலிருந்து மீட்க முன்வரவேண்டும். இச்சிறுவர் சிறுமியரிடம் இயல்பாக இருக்கக்கூடிய ஆற்றல்கள் திறமைகளை வெளிக்கொணர்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

கல்வி என்ற ஞானவெளிச்சத்தைப் பெறுவதற்கான அவர்களின் உரிமை உறுதி செய்யப்படவேண்டும். உலகின் யன்னல்கள் அவர்களுக்காக திறக்கப்படவேண்டும்.

**க. ஞானதாஸ் (சிவம்)**

## இந்தியாவா! நோ.......... 01ம் பக்கம் தொடர்ச்சி

இரண்டு பிரதான அம்சங்களை உள்ளடக்கியிருந்தன.

இது இங்குள்ள தமிழ்ப் பத்திரிகை எழுத்தாளர்களை முகஞ்சுழிக்க வைத்துள்ளது. இதனை சிங்கள இனவாதிகள் தமது பேரினவாத நிலைப்பாட்டுக்கு பலரை ஆதரவாக விளங்கிக் கொண்டார்கள். ஆக அவரவர் மொழியில் விளங்கிக் கொள்கிறார்கள். யானை பார்த்த குருடர்கள் போல! ஆனால் இந்தியா நிதானமாகவே கருத்தை வெளியிட்டிருக்கிறது என்றே கூற வேண்டும். இந்தியா நோர்வேயின் சமாதான முயற்சிக்கு எதிராக கருத்தை வெளியிடவில்லை.

இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளரான ஜே. என். டிக்சித் அவர்கள் கூட அண்மைக் காலத்தில் எழுதிய கட்டுரை ஒன்றில் இந்தியா நோர்வேயின் சமாதான முயற்சிக்கு ஆதரவளிக்க வேணடுமென்றே குறிப்பிட்டிருந்தார். இந்தியாவிடம் ஒரு வார்த்தை கூட கேட்காமல் நோர்வே அனுசரணையாளர் செயற்பாட்டுக்கு வந்திருக்குமென்றோ, ஜரோப்பிய யூனியன் மற்றும் அமெரிக்காவின் ஆசீர்வாதம் இல்லாமல் அவர்கள் இந்த முயற்சியில் இறங்கியிருப்பார்கள் என்றோ கருதுவது அறியாமையாகும்.

பூகோள அரசியல் நிலவரங்களின் அடிப்படையிலும், இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் தொடர்ச்சியாக தொடர்பு பட்டிருந்த நாடு என்ற அடிப்படையிலும் இந்தியா இவ் விடயத்தில் உன்னிப்பான அவதானத்தைக் கொண்டுள்ளது என்பதும் உண்மையாகும்.

பேரினவாதிகளோ அல்லது தமிழ் இன அடிப்படைவாதிகளோ எப்படி வேண்டுமென்றாலும் விளங்கிக் கொண்டு போகட்டும். ஆனால் இந்த நாட்டின் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தீர்வில் சமாதானத்தைக் கொண்டு வருவதில் இந்தியாவானது காத்திரமான ஆக்க பூர்வமான பங்களிப்பை வழங்கும் தகுதியையும் கொண்டிருக்கிறது. அதனை மேற்கொள்ள வேண்டிய தருணமும் இதுவே. •

பிரதமர் பொன்டேவிக் அவர்களின் இராஜினாமாவை அடுத்து நோர்வேயின் அதிகாரத்தில் இருந்த அரசு பதவியிழந்துள்ளது. நோர்வே பாராளுமன்றம் 165 ஆசனங்களைக் கொண்டது அதில் 65 ஆசனங்களைக் கொண்ட தொழிற்கட்சியின் தலைவர் ஸ்டோடல் டென்பேர்க் புதிய பிரதமராகப் பதவியேற்கும் ஏது நிலை காணப்படுகிறது. நோர்வே அரசாங்கம் பதவியிழந்துள்ள போதும் இலங்கையில் சமாதானப்பணிகளை நோர்வே கைவிடாது என இலங்கைக்கான நோர்வே அதிகாரி தெரிவித்துள்ளார்.

www.padippakam.com



# இந்தியாவை ஆக்கிரமிக்கும் திட்டம் ஹிட்லருக்கு இருந்ததா?



ஹைபர் கணவாய் ஊடாகவும், காக்கசஸ் ஊடாகவும் ஊடுருவி இந்தியாவை ஆக்கிரமிக்க ஹிட்லர் திட்டம் வைத்திருந்ததாப் பரபரப்பூட்டும் செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

வரலாற்றாசிரியரும், இந்திய வியலாளருமான கிரஹரி பொந்தரயோவ்ஸ்கி என்பவர் ரஷ்யாவின் ரேடியோ ரஷ் (Radio Rus)ற்கு தெரிவித்துள்ளார். நாஜிகளின் யுத்தகால ஆவணங்களிலிருந்தே தாம் இதனை அறிந்து கொண்டதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்குப்பகுதியை யப்பானும் மேற்குப் பகுதியை ஜேர்மனியும் பங்குபோட்டுக் கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டது. இந்த நாஜி இராணுவத் திட்டம் பார்போசா திட்டம் (Barbossa) என சங்கேத மொழியில் குறிப்பிடப்பட்டிருந்து.

ஹைபர் கணவாய் பகுதிக்கு யாரை ஆளுனராக நியமிப்பது என்பதை ஹிட்லர் முன்கூட்டியே தீர்மானித்திருந்தானாம்.

சோவியத் யூனியனின் மேற்குப்பகுதியைக் கைப்பற்றி நாஜிசாம் ராஜ்ஜியம் ஒன்றை நிறுவுவதற்கு ஹிட்லரிடம் விரிவான திட்டம் ஒன்று இருந்ததாக கிரஹரி மேலும் தெரிவித்துள்ளார்.

**நன்றி:- இந்துஸ்தான் ரைம்ஸிலிருந்து**

அட்டதிக்கு

தொகுப்பு சப்திசி

# பெரிய இடத்துச் சமாச்சாரம்

இந்தியாவில் பெயர் சொல்லக் கூடிய பெரும் வைத்திய நிபுணர்கள் இருக்கிறார்கள். இருந்துமென்ன, இந்தியர்களில் ஒரு பகுதியினருக்கு இருக்கும் அமெரிக்க மாயை இன்னும் நீங்கிய பாடில்லை. அதற்கு ஸ்ரீதேவி என்ன விதிவிலக்கா?

1995 இல் இந்திய முன்னணி நடிகை ஸ்ரீதேவியின் தாயார் மீது ஒழுங்கற்ற முறையில் சத்திர சிகிச்சை மேற்கொண்ட அமெரிக்க நரம்பியல் நிபுணர், அவரது கண்காணிப்பில் இருந்த நோயாளி ஒருவர் மரணமடைந்ததையடுத்து தொழில் செய்வதற்கு தடைசெய்யப்பட்டுள்ளார்.

ஸ்டேட்டன் தீவு பல்கலைக்கழக வைத்தியசாலையின் நரம்பியல் பிரிவின் தலைவரான எகுட் ஆர்பிட் என்பவர் நோயாளிகளை கவனிக்கும் சேவையிலிருந்து நிறுத்தப்பட வேண்டும் என்று அவர் பணிபுரியும் வைத்தியசாலைக்கு சுகாதாரத்திணைக்களம் பணித்ததையடுத்து அவர் தொழில் செய்வதை நிறுத்திக் கொள்ளச் சம்மதித்துள்ளார். இவ்வாறு நியூயோர்க் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

ஆர்பிட் அவர்களின் நோயாளிகளில் ஒருவர் மேற்படி வைத்தியசாலையில் இறந்ததையடுத்து இப்பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. இதுபற்றி விசாரணை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1995இல் மெமோறியல் - ஸ்லோன் கெற்றரிங் புற்றுநோய் நிலையத்தில் ஸ்ரீதேவியின் தாயார் ராஜேஸ்வரி ஐயப்பன் (வயது 59) என்பவரின் மூளையில் தவறான பகுதியில் சத்திர சிகிச்சை மேற்கொண்டதற்காக ஆர்பிட் அங்கிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டார். நியூயோர்க் மாநில சுகாதாரதிணைக்கள ஆணையர் அந்தோனியா நொசெல்லோ அவர்களின் எழுத்து மூலமான அறிக்கை ஒன்றில் கூறியிருப்பதாவது பூர்வாங்க விசாரணையின் பின் "எகுட் ஆர்பிட்" அவர்கள் மேற்கொண்ட சத்திர சிகிச்சை தொடர்பாக நோயளிகளுக்கு வலுவான ஆபத்துச் சூழல் நிலவியது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

ஆர்பிட் அவர்களின் சகல சேவைகளையும் உடனடியாக நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை நடைமுறைக்கு கொண்டுவருமாறு வைத்தியசாலையை பணித்து அவர்களும் அதற்கு ஒப்புக் கொண்டுள்ளனர்.

1995இல் ஆர்பிட் அவர்கள் மெமோறியல்-ஸ்லோன் கெற்றரிங் வைத்திய சாலையில் நரம்பியல் பிரிவின் தலைவராக இருந்த போது முதன் முதலில் விசாரிக்கப்பட்டார். அப்போது அவர் திருமதி ஐயப்பன் அவர்களின் மூளையில் நல்ல பகுதியில் தவறுதலாக சத்திரசிகிச்சை மேற்கொண்டிருந்தார்.

மூளையின் இடது பகுதியில் புற்றுநோய்க் கட்டி ஏற்பட்டிருந்த ஸ்ரீதேவியின் தாயாருக்கு அந்தச் சத்திர சிகிச்சைக்குப் பின் ஞாபக சக்தியையும் குடும்ப உறுப்பினர்களை அடையாளம் காணும் தன்மையையும் இழந்திருந்தார். அது தொடர்பாக அப்போது சுகாதாரத்திணைக்களம் ஸ்லோன் கெற்றரிங் வைத்திய நிறுவனத்திற்கு உச்ச பட்ச குற்றப்பணமாக 16ஆயிரம் டொலரை விதித்திருந்தது. ஆர்பிட் அவர்களின் செயற்பாடுகளுக்காக அவரை ஒரு வருடத்திற்கு கண்காணிப்பில் வைத்திருக்க மாநில அரசு தீர்மானித்தது. அதனால் அவர் தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்பட்டார்.

1995இல் சுகாதார திணைக்கள அறிக்கையில் ஆர்பிட் அவர்கள் இரண்டு இந்திய நோயாளிகளின் எக்ஸ் கதிர் படங்களினது அடையாளங்களை குழப்பிவிட்டார் என தெரியவந்தது. அந்த நோயாளிகளில் ஒருவர் தான் ஸ்ரீதேவியின் தாயார். இருவருக்குமே மூளையில் கட்டி இருந்தது ஆனால் எதிர் எதிர்ப்பக்கங்களில் ஸ்லோன் கெற்றரிங் வைத்தி யசாலையிலிருந்து 1995 இல் தம்மை நீக்கியது தொடர்பாக ஆர்பிட் அப்போது மேன்முறையீடு செய்து அது பின்னர் நிராகரிக்கப்பட்டது.

**நன்றி:- டைம்ஸ் ஒப் இந்தியாவிலிருந்து.**

# பிருந்தாவனத்து நந்தகுமாரனே!

பிருந்தாவனமும் நந்தகுமாரனும்... என்ற பழைய தமிழ்க்காதல் பாடல் இன்றும் பலரின் மனங்களில் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் பிரவாகிக்க வைக்கும் பாடல்.

கண்ணன் ஓடியாடி விளையாடிய இடம் என்பது ஐதீகம்.

ஆனால் அந்தப்பிருந்தாவனத்தில் வாழும் விதவைப் பெண்கள் அனுபவிக்கும் துயர் பேரதிர்ச்சி தரக்கூடியவை.

உத்தரப்பிரதேச சமூக நலன் புரிச்சபை உத்தரப்பிரதேச அரசுக்கு அனுப்பிய உத்தியோக பூர்வ அறிக்கை ஒன்றில் திடுக்கிடும் தகவல்கள் சிலவற்றைச் சுட்டிக் காட்டியுள்ளது.

1. பிருந்தாவனத்தில் உள்ள குருக்கள்மார் அங்குள்ள இளம் விதவைகளைப் பாலியல் சுரண்டலுக்கு உட்படுத்தியதோடு உள்ரீதியான துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கியுள்ளார்கள்.

2. இந்தச்சமூக விரோத சக்திகள் பின்னணிப்பலம் கொண்டவையாக இருப்பதால் நிர்வாகத்தினால் கட்டுப்படுத்த முடியவில்லை.

3. சமீபத்தில் இந்த நகரில் மூன்று விதவைப்பெண்கள் பெரிய மனிதர்கள் எனக்கருதப்படும் சிலரால் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்தபோது காவல் துறையினரால் முதல் தகவல் அறிக்கை (F.I.R) கூடப் பதியப்படவில்லை.

இதுசம்பந்தமாக விசாரணை குழுவுடன் உள்ளூர் நிர்வாகம் ஒத்துழைக்காததால் பாதிக்கப்பட்ட விதவைப் பெண்களின் முறைப்பாடுகள் கூட பதியப்படவில்லை

விசாரணைக்குழுவானது 5000 தொடக்கம் 6000 விதவைப்பெண்கள் புகலிடம் தேடியுள்ள பகுதிகளிலேயே தனது அவதானங்களைச் செலுத்தியுள்ளது. இவர்களில் 99 வீதமானவர்கள் வங்காள விதவைப்பெண்களாவர். ஒரு வீதத்தினர் நாட்டின் பிறபகுதிகளைச் சேர்ந்தவர்கள்.



நீண்ட அந்த அறிக்கையில் அந்தப்பெண்கள் வாழ்கின்ற சூழ்நிலைகள், ஆச்சிரமங்களினாலும், நம்பிக்கைச் சபைகளினாலும் அவர்கள் சுரண்டப்படுதல், மிருகங்களை விட கேவலமாக நடத்தப்படும் சம்பவங்கள் பற்றி விலாவாரியாக விபரங்கள் தரப்பட்டுள்ளன.

விசாரணைக்குழுவினர் சமர்ப்பித்த அறிக்கையில் ஒரு நடுத்தரவயது விதவைப்பெண் அவள் ஆச்சிரமத்திற்குள்ளேயே சென்று உணவைப்பெறும் பற்றுச்சீட்டை வழங்க அங்குள்ள பராமரிப்பாளர் மறுத்த சம்பவம் ஒன்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பெண் ஏனைய பெண்களுடன் சதா தகராறில் ஈடுபடுபவர் என்றும் அதனாலேயே பற்றுச்சீட்டு வழங்கவில்லை என்றும் கூறிய போதிலும் ஏனைய விதவைப் பெண்கள் ரகசியமாக அதனை மறுத்தனர். தனக்கு வேண்டிய சேவையை (அதாவது அவளது உடலை) வழங்கினால் பற்றுச் சீட்டு தரப்படும் என்று பராமரிப்பாளர் அப்பட்டமாகக் கூறியதாக அப்பெண்கள் தெரிவித்திருந்தனர்.

பிருந்தாவனத்தில் நிலவும் திடுக்கிடக் கூடிய நிலையை வெளிப்படுத்தும் அறிக்கை மேலும் தெரிவிப்பதாவது:

மாலை வேளைகளிலும் இரவிலும் இந்தப் பெண்களை தெருவில் சந்திக்கும் எந்த ஆணும் அவர்களை வழிமறித்து தகாத முறையில் நடந்துகொள்ள முடியும். இதுபற்றி அந்தப்பெண்கள் யாரிடமும் முறையிட முடியாது. ஏனெனில் அவர்கள் சொல்லுக்கு மதிப்பே கிடையாது.

நிர்வாகத்தின் கண்களுக்கு முன்னாலேயே தகாத நடவடிக்கைகளில் ஈடுபடும் குகைகளாக விளங்கும் இரண்டு ஆச்சிரமங்களின் பெயர்களை உத்தரப்பிரதேச சமூகநலன்புரிச்சபை வெளியிட்டுள்ளது. இங்குள்ள சில விதவைகள் 30வருடங்களுக்கு மேலாக இங்கு வாழ்ந்து வந்த போதிலும் கணிசமான எண்ணிக்கையிலான இளம் விதவைகள் இங்கு இலவச உணவு, மற்றும் வசதிகள் வழங்கப்படுவதாக ஆசைகாட்டி வயதான விதவைகளால் இங்கு அழைத்துவரப்படுகின்றனர்.

தாம் அழைத்துவரும் இளம் விதவைகளை பஜனை ஆச்சிரமங்களில் அல்லது அவர்களுக்கு ஆரம்ப "குருமந்திரம்" வழங்குவதென கூறி உள்ளூர் குருக்களிடம் விட்டுவிடுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்தக் குருக்கள் அந்த இளம் விதவைப்பெண்களை உளரீதியாகவும், உடல்ரீதியாகவும் சுரண்டிய பின் ஆச்சிரமத்திலிருந்து வெளியேற்றி விடுகிறார்கள் என்று மேலும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

இந்தப்பெண்களின் இளம் மகள்கள் பட்டப்பகலிலேயே உள்ளூர் குண்டர்களால் கடத்திச்செல்லப்பட்ட சம்பவங்களும் உண்டு. கடத்தப்பட்ட இளம் பெண்கள் பெரும்பாலும் மீட்கப்படுவதில்லை. ஏனெனில் உள்ளூர் பொலிசில் எந்த அறிக்கையும் தாக்கல் செய்யப்படுவதில்லை. அந்தப்பகுதியில் வாழும் செல்வாக்கு மிக்க பிரமுகர்களிடம் கெஞ்சி முறையிடுவதை தவிர அந்தப்பிள்ளைகளின் தாய்மாருக்கு வேறு எதுவும் முடிவதில்லை.

இந்த ஆய்வுகளின் போது சமூகநலன்புரிச்சபை உறுப்பினர்கள் குண்டர்களினதும், மாபியாக் கும்பல்களினதும் கோபத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆய்வுக் குழுவின் படிவங்களை நிரப்பிக் கொடுப்பவர்கள் அதன் விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும் என்று பாலயோகி கோவிலின் பராமரிப்பாளர் அச்சுறுத்தியிருந்தார்.

உணவைப்பெறும் ஆவலில் ஆண்களின் வரிசைக்கு மாறிய 55வயது விதவைப்பெண் ஒருவர் சாது ஒருவரின் கமண்டலத்தினால் தாக்கப்பட்டு உடையெல்லாம் இரத்தக் கறை படிந்த நிலையில் ஆய்வுக் குழுவினர் அவதானித்துள்ளனர். இந்தப் பெண்களுக்குப் பொருளாதார உதவி செய்யும் வசதி தங்களிடம் இல்லை என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொண்ட நலன் புரிச்சபை உறுப்பினர்கள் ரட்ணாடே, ஏ.கே. குப்தா, கலாநிதி சுமன் சிறிவாஸ்தவ ஆகியோர் அரசாங்கத்திற்கு ஒரு மாற்றுத் திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளனர்.

**நன்றி:- ரைம்ஸ் ஒப் இந்தியாவிலிருந்து**

படிப்பகம்

www.padippakam.com



# சோக்கிரட்டீஸ்

**கேள்வி:** நாடாளுமன்றத்தில் கடமையாற்றிய பொலிஸ் அதிகாரி ஒருவர் சம்பளப் பணத்தைத் திருடினாராமே ?

**த. கனகநாயகம்**
**வெள்ளவத்தை.**

**பதில்:** இத்தகைய அதிகாரிகளின் பாதுகாப்பில் பாராளுமன்றம் பாதுகாப்பாக இருக்குமா ?

★★★

**கேள்வி:** ரணில் அரசாங்கத்தின் தீர்வுத்திட்ட யோசனைகளை ஆதரிக்கத் தயாராக இருப்பதாக முன்னர் தெரிவித்திருந்தாரே. இப்போது 1997 ம் ஆண்டு யோசனைகள் என்று ஏதோ எல்லாம் பேசுகிறாரே ?

**க. யேசுதாசன்**
**மட்டக்களப்பு.**

**பதில்:** நாக்கு நரம்பில்லாதது என்று உமக்குத் தெரியாதோ ?

★★★

**கேள்வி:** குமாரின் படுகொலை எதை உணர்த்தி நிற்கிறது?

**இ. ரவுஜர்ட்ணம்**
**கொழும்பு.**

**பதில்:** வேர் விட்டு கிளை பரப்பி நிற்கும் சகோதரப் படுகொலை என்ற துயரத்தை.

★★★

**கேள்வி:** தொலைக் காட்சி வானொலி அனுமதிப் பத்திரங்கள் புதிய வரவு செலவு திட்டத்தில் ரத்து செய்யப்பட்டது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**ந. சுந்தரவடிவேலு**
**திருக்கோயில்.**

**பதில்:** அப்பாவி கிராம சனங்களைத் தவிர வேறு யாராவது அந்த அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பிக்கின்றார்களா என்ன ? இந்த நாட்டின் பெருவாரியான சனங்களுக்கு இது பெரிய விடயந்தான்.

★★★

**கேள்வி:** கங்கூலி அடுத்து வரும் ஒருநாள் தொடர் போட்டிகளுக்கு கப்டனாக நியமிக்கப்பட்டது நல்ல விடயமா?

**ச. இரவீந்திரன்**
**திருமலை.**

**பதில்:** இந்திய கிரிக்கட் அணியில் இத்தகைய மாற்றங்கள் அடிக்கடி நடைபெற்றால்தான் அது உருப்பட வாய்ப்புண்டு .

★★★

**கேள்வி:** நோர்வேயின் சமாதான முயற்சிகள் வெற்றிபெறுமா?

**ம. அலோசியஸ்**
**ரம்பைக்குளம், வவுனியா.**

**பதில்:** இங்கு பாலஸ்தீனமும் இல்லை. அராபத்தும் இல்லை. ஆனாலும், வெற்றி பெறுமென நம்புவோம். நம்பிக்கை தானே வாழ்க்கையின் உயிர்நாடி.

★★★

**கேள்வி:** அதிகார பரவலாக்கல் பற்றிப் பேசுகையில் சுதந்திர பொலிஸ் கமிசன், சுதந்திர நீதிச்சேவை ஆணைக்குழு, சுதந்திர தேர்தல் கமிசன், பொது சேவை ஆணைக்குழு என ரணில் அடுக்குகிறாரே?

**ப. கமலநாயகி**
**திருகோணமலை.**

**பதில்:** பலேகில்லாடி. விடயத்தை விட்டுவிட்டு வேறு விடயங்களைப் பேசி அரசுக்கு, தமிழ் மக்களுக்கு, நோர்வேக்கு எல்லோருக்கும் பெரும் பூச்சரம் சுற்றுகிறார்.

**கேள்வி:** அனோஜா, ருக்கந்த மற்றும் பாடகர்கள் கலைஞர்கள் மீதான தாக்குதல் பற்றிப் பல விதமான கதைகள் உலாவுகின்றனவே ?

**க. அபிராமி**
**வவுனியா.**

**பதில்:** நந்தனமாரசிங்க, விஜயகுமாரணதுங்க, ரிச்சாட்டிசொய்சா, செல்வி போன்றவர்கள் இருண்ட காலத்தில் படுகொலை செய்யப்பட்டவர்கள் அல்லது காணாமல் போனவர்கள்.

1970 களின் பிற்பகுதியில் எதிரிவீர சரத்சந்திர இனவாதிகளால் அச்சுறுத்தப்பட்டார். நந்தாமாலினியின் பாடல்கள் தடை செய்யப்பட்டன.

கலைஞர்கள் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படுவது ஒரு துற்சகுனம். கலைஞர்கள் மனநிறைவாக வாழ்கிறார்கள் என்பதே சமூகத்தின் ஆரோக்கியத்துக்கு அறிகுறி.

★★★

**கேள்வி:** இரண்டாயிரமாம் ஆண்டில் தமிழர்கள் சாதிக்க முயல்வது என்ன ?

**அ. ஆல்வார்ப்பிள்ளை**
**பெரியகரசல், மன்னார்.**

**பதில்:** கல்தோன்றி மண்தோன்றா காலத்து முன்தோன்றி மூத்தகுடியை உருவாக்க முயல்கிறார்களா என்ற சந்தேகம் நியாயமாக எழவே செய்கிறது.

★★★

**கேள்வி:** மட்டக்களப்பில் நடைபெற்ற சமாதான பேரணியில் பெருமளவு மக்கள் பங்குபற்றியது எதனைக் காட்டுகிறது?

**ம. பாண்டியன்**
**தலவாக்கொலை.**

**பதில்:** வாழ்வின் சகல அம்சங்களையும் இழந்த மக்களின் அமைதி சமாதானத்துக்கான அங்கலாய்ப்பு.

**கேள்வி:** வாரணாசி விதவைப் பெண்களின் துயரக்கதை நீர படத்துக்காக ஷபானா அஸ்மி மொட்டை அடித்தது பற்றி...?

**செ. இரவீந்திரராசா**
**களுவாஞ்சிக்குடி.**

**பதில்:** எமது சமூகத்துக்கு மொட்டை அடித்துத்தான் சில விடயங்களை விளங்கப்படுத்த வேண்டும். மார்க்சிம் கோர்க்கியின் பிரபலமான சிறுகதையான தாங்கோவின் எரியும் இதயத்தில் அவன் தன்னை நம்பாத மக்களுக்கு அவர்களுக்காக எரிகின்ற தன் இதயத்தைக் காட்டுகிறான்.

★★★

**கேள்வி:** திருமலையில் கப்பலுக்காக தவமிருக்கும் தமிழ் மக்கள் பற்றி...?

**தீ.சுவர்ணலோஜினி**
**யாழ்ப்பாணம்.**

**பதில்:** கப்பலோட்டிய தமிழன் கப்பலுக்காகத் தவமிருக்கிறான் என்பதா! இந்த பழம் பெருமையும் எமது சமுகத்தைப் படுகுழியில் தள்ளியது.

★★★


**கேள்வி:** ஏரோட்டிச் சோறுபோட்ட தமிழர் கால்வயிற்றுக் கஞ்சிக்கு கலயமேந்தி... என்று வன்னியிலிருந்து வருபவர்களைப் படம் பிடித்து அந்த படத்தின் கீழ் ஒரு பத்திரிகையில் இவ்வாறு அடிக்குறிப்பிடப்பட்டிருந்தது?

**பொ. திருநாவுக்கரசு**
**மூதூர்**

**பதில்:** ஏன் எப்படி எதற்கு என்று கேள்வி கேட்காத பேர்வழிகளுக்கு, மண்ணில் தலை புதைத்து தீக்கோழிபோல் நடந்து கொள்பவர்கள் இதனைப் புரிந்து கொள்வதில் சற்று சிரமம் இருக்கத்தான் செய்யும்.

## உடல் சிதறி உயிரழியும் குரூரம் மனிதாபிகளே அணிதிரள்வீர்

ஜெயவர்த்தனபுர பாராளுமன்றத்திற்கு செல்லும் வழியில் ராஜகிரிய ஆயர்வேத வைத்தியசாலைக்கு எதிர்ப்புறமாக உள்ள சுற்றுவட்டப் பகுதியில் 10.03.2000 அன்று விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக அப்பாவிப் பொது மக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டும், பெருமளவானவர்கள் காயமடைந்தும் உள்ளனர்.



இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக முக்கிய பிரமுகருக்கு குறி என்றும் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கான அவசியத்தை உணர்த்துவதாகவும், யுத்தநிறுத்தம் பேச்சுவார்த்தைகளின் அவசர அவசியத்தை வலியுறுத்துவதாகவும் காரணங்கள் கண்டுபிடித்து கூறப்பட்டாலும் மனிதநேயம் உள்ள எவரும் இதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இவ்வாறு பொதுமக்களை ஆபத்திற்குள்ளாக்கும் தாக்குதல்கள் கண்டிக்கப்பட வேண்டும். நிறுத்தப்பட வேண்டும்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முன்வர வேண்டும். புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை தொடங்க வேண்டும் என்று பல்வேறு தரப்பினராலும் அழுத்தியுரைக்கப்பட்டது.

தற்போது நடுநிலையாளராக செயற்படுவதற்கு விருப்பம் தெரிவித்து நோர்வே அரசாங்கம் முன்வந்திருக்கும் வேளையில் அரசாங்கமும் இது விடயத்தில் அக்கறை கொண்டுள்ள நிலையில் புலிகள் மேற்கொண்ட இந்த தாக்குதல் மேற்படி கோரிக்கைகளை முன்வைத்தவர்களையே சங்கடத்திற்குள்ளாக்கியுள்ளது.

பொதுமக்கள் நடமாட்டம் மிக்க பகுதிகளில் புலிகள் தாக்குதல் மேற்கொள்வது இது முதல் தடவையல்ல. கொழும்பில் இடம்பெறும் தேடுதல்கள், சோதனைகளால் பொதுமக்கள் இன்னலுறுவதாக தெரிவிக்கும் மனித உரிமை வாதிகள், பத்திரிகையாளர்கள் இது போன்று பொதுமக்கள் நடமாட்டம் மிக்க பகுதிகளில் நடைபெறும் தாக்குதல்களை தடுப்பதற்காகவும் குரலெழுப்ப வேண்டும்.

சிங்கள மக்களை நெருக்கடிக்குள்ளாக்குவதன் மூலம் இனக் கலவரம் ஒன்றை தேற்றுவித்து அரசாங்கத்தை இக்கட்டுக்குள் தள்ளிவிடுவதற்கு புலிகள் முயன்று வருவதாகவே அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். ஆனால் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக தமிழர் தரப்பே இதனால் இக்கட்டுக்குள் தள்ளப்படும் என்பதனையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது பேரன்ற தாக்குதல்களை கைவிட்டு தற்போதுள்ள வாய்ப்பை பயன்படுத்தி அரசியல் தீர்வை உருவாக்கவும், நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவும் புலிகள் முன்வர வேண்டும். இந்த செயல்முறைகளை வலியுறுத்திவரும், நம்பிக்கை கொண்டிருக்கும் அனைவரும் புலிகளிடமும் இதனை வலியுறுத்த வேண்டும் எனவும் வேண்டுகிறோம்.

## படித்ததும் ரசித்ததும்

பேசிக்கொண்டிருப்பதனால் மாத்திரம் எதனையும் சாதித்துவிட முடியாது. நாம் செயலில் இறங்க வேண்டும். செயலில் இறங்கும்போது தவறுகளும் நிகழவே செய்யும்.

**சண்முகதாசன் நினைவுக் கருத்தரங்கில் பேராசிரியர் சிவசேகரம்.**

குமாரின் படுகொலை கண்டிக்கத்தக்கது. அதிகேவலமானது. கயமைத்தனமானது. கோழைத்தனமானது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், குமாரின் படுகொலையை மட்டுமே கண்டிப்பதும் மற்றயவற்றுக்கு நியாயம் கற்பிப்பதும் என்ற போக்குத்தான் அதைவிட கயமைத்தனமானது.

**அமுதில் குருசேத்திரன்.**

கன்னித்தமிழ் போன்ற பைத்தியகார குறியீடுகள் இனி நமக்குத் தேவையில்லை. ஆங்கிலம் கன்னியாகவே இருந்திருந்தால் அது இன்று உலக மொழியாக ஆகியிருக்காது.

**விண்நாயகனில் இந்திரா பார்த்தசாரதி.**

கடவுள் இருக்கிறாரா என்ற கேள்விக்கு குப்புசாமி அல்லது குமாரவேலு இருக்கிறாரா என்பதைப்போல உடனடியாகப் பதில் சொல்ல இயலாது.

**விண்நாயகனில் சுஜாதா.**

இன்று முடிவற்று தொடரும் போரின் காரணமாகப் பேணி வைத்திருந்த அற்பசொற்ப ஆவணங்கள் கூடத் தொலைந்து விட்டன. கல்வி, கலாச்சாரம், உண்மை, நேர்மை ஆகிய உயர்ந்த பண்பாடுகளையிட்டுக் கிஞ்சித்தும் அக்கறையற்ற அரசியற் கோட்பாடுகளைப் பின்பற்றும் சமூக விரோதசக்திகள் யாழ்ப்பாணத்தில் நம் வீடுகளில் காலம் காலமாக சேகரித்து வைத்திருந்த பெறுமதிமிக்க புத்தகங்கள், ஆவணங்கள், படங்கள், ஒலிநாடாக்கள் எல்லாவற்றையுமே அழித்து நாசம் செய்து விட்டன.

**சரிநிகரில் கலாநிதி சாந்தசீலன் கதிர்காமர்.**

காசி எப்படிப்பட்ட ஷேத்திரம். முடிச்சவிழ்த்தான், மொள்ளமாரிப்பயல், பஞ்சமாபாதகங்களையும் அஞ்சாமல் செய்தவன், ஊரையடித்து உலையில்போட்டு எல்லோரது வயிற்றெரிச்சலையும் கொட்டிக்கொண்டவன் என்று இப்படி என்னென்ன வகைப்பாவங்கள் உண்டோ அத்தனை பாவங்களையும் செய்தவர்கள் யாராக இருந்தாலும் காசிக்கு வந்து கங்கா தீர்த்தம் ஆடினால் அவர்கள் செய்த அத்தனை பாவமும் முழுக்குப் போட்ட விநாடியிலேயே தீர்ந்து போய்விடுமாம். காசியிலேயே ஒருத்தன் இறந்து போனால் அவனுக்கு மோட்சம் நிச்சயம்.

இந்தியாவில் எந்தப் பகுதியில் இறந்த போனார்களானாலும் அவர்களது வாரிசுகள் காசிக்கு வந்து கங்கைக் கரையில் தங்களத பித்ருக்களுக்கான கர்மாக்களைச் செய்வார்க ளானால் அந்தப் பித்ருக்களுக்கு நேரடி மோட்சம்தான்.

இப்படி இந்துக்களின் மோட்சவாசற்படிய கத் திகழும் கங்கை கரையில் நின்று விதவை கள் வறுமை காரணமாக வாழ வழியற்ற நிலை யில் விபச்சாரத்தில் ஈடுபட்டார்கள் என்று பட எடுப்பதா?

என்று கொதித்து குதியாட்டம் போடுகிறா கள் அவர்கள்.

**நக்கீரனி சின்னக்குத்தூசி**

படிப்பகம்

www.padippakam.com



# சாது மிரண்டால் காடு கொள்ளாது

திருமலை சல்லிக் கிராமத்தில் 26.02.2000 இல் கடற்படையினர் புலிகளால் தாக்கப்பட்டதையடுத்து சல்லிக் கிராம மக்களின் 12வீடுகள், இரண்டு கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. பலர் தாக்கப்பட்டு படுகாயமடைந்தனர். சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன. ஒரு தாக்குதலுக்குப் பதில் தாக்குதலாகப் பொதுமக்கள் மீது நடத்திய தாக்குதல்களே மக்களை சினமுற வைத்ததை அரசு மனங்கொள்ள வேண்டும். திருமலையின் கிராமங்களில் இதுபோன்ற சம்பவங்கள் வாடிக்கையான விடயமாகும்

ஏற்கனவே மூதூர்பகுதியில் 30இற்கு மேற்பட்டபொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களும், தம்பலகாமச் சம்பவங்களும் இத்தகையனவே. இத்தயை சம்பவங்கள் தொடர்பாக நீதி விசாரணை நடைபெறுவது மிகவும் குறைவு. கொக்கட்டிச்சோலை படுகொலைச் சம்பவங்களின் விசாரணைகள் மூதூர் படுகொலை சம்பவங்களின் விசாரணைகள் இழுபட்டுக்கொண்டே செல்கின்றன. தாமதித்த நீதி மறுக்கப்பட்ட நீதியாகும்.

தற்போது சல்லியில் ஒரு மாற்றம் நடந்திருக்கின்றது. தாம் தாக்கப்பட்ட உடனேயே மக்கள் வீதிக்கு இறங்கினார்கள். உப்புவெளி குச்சவெளி வீதியை மறித்து ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என சல்லிக் கிராமமே வீதி மறியல் செய்தது.

சுமார் 20இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமாகியுள்ளன. சேதமிழைக்கப்பட்டவற்றிற்கு நஷ்ட ஈடு வழங்குமாறும் தமது கிராமத்தில் கடற்படையினருக்குப் பதிலாக பொலிசாரை பாதுகாப்புக்கு நிறுத்துமாறும் மக்கள் கோரினார்கள். செய்வார்களா பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## தொடரும் வன்முறைகள்

கன்னியா தாக்குதல், சல்லிக்கிராமத்தில் நடந்த சம்பவங்கள், உட்துறைமுக வீதியில் தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதல் என்பன திருமலை நகரின் விளிம்பு நிலை அமைதியையும் சீர்குலைத்து விடுமோ என திருமலை வாழ் மக்கள் அஞ்சுகின்றனர்.

புதிய நூற்றாண்டுக்கான உலகின் சமாதான நகரங்களில் ஒன்றான திருமலை எரிமலையாக மாறாமல் இருக்க வேண்டும் சமாதானத்துக்கான ஆக்கப்பூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் காலத்தில் இத்தகைய சம்பவங்கள் சமாதானத்தை விரும்பும் மக்களை வெறுப்படையச் செய்யும் விடயமாகும்.

**வே. சின்னத்துரை (சிவம்)**

# உண்மைகள்.............. 12ம் பக்கம் தொடர்ச்சி

வரன் (ஏ.ஜி.ஏ) ஜெயக்கொடி (சோமு) இருவரிடமும் பொறுப்பற்றதனமாக நடக்கின்றீர்கள் என்று கூறி விளக்கம் கேட்டபோது, ஓர் அரசியல் தந்திரமென்றும் இதை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். இவர்களின் அரசியல் நாகரீகமற்ற செயல்களும் தகுதிக்கு மேலுள்ள செயற்பாடுகளுமே கட்சியைப் பிளவுபடுத்தியுள்ளது.

இது இவ்வாறிருக்க இவர்களின் அலுவலகத்திற்கு அடுத்தாற்போல் எனது இருப்பிடம் இருந்ததால் அவர்களின் பாதுகாப்பு அரணை எனது இருப்பிடத்தின் வாசலில் அமைத்து என்னைப் பல வழிகளிலும் தொல்லைப்படுத்தினார்கள். இதன் விளைவாக கடந்த 23ம் திகதி எனது வேலிகளை நான் செப்பனிட்டபோது அவர்கள் சரமாரியாக என் கண் முன்னேயே துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டு குருமண்காட்டில் கட்சிக்காரியாலயம் அமைத்துள்ள தோழர்களே துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள் என்றும் பொலிசாரிடம் முறைப்பாடு செய்தார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் நான் தமிழ் பேசும் மக்களின் அவலங்களுக்கும், அகதி வாழ்வுக்கும் அன்றாடப் பிரச்சினைகளுக்கும் ஒரு அரசியல் தீர்வை ஏற்படுத்தக்கூடிய அழுத்தங்களை கொடுப்பதற்கு தொடர்ந்தும் செயல்படுவேன் என்பதனைக் கூறும் அதே நேரத்தில் இந்த வெட்ககரமான சம்பவங்களை உங்கள் முன் சொல்வதற்கும் எனக்கு வெட்கம் தான் ஆனாலும் உண்மைகள் ஒழிக்கப்படுவதால் உண்மையை நிருபிக்க வேண்டிய கடமைப்பாடு உள்ளவனாக உள்ளேன். •

# கட்டளை............ 12ம் பக்கம் தொடர்ச்சி

இ. 1ம் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளவர் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமாக செயல்படுவதையும், 1ம் இலக்கம் தொடக்கம் 13ம் இலக்கம் வரையுள்ள பிரதிவாதிகள் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய கமிட்டி உறுப்பினர்களாகச் செயற்படுவதையும் நிரந்தரமாகத் தடை செய்யும்படியும்,

ஈ. இறுதியான விசாரணைக்குப்பின் தீர்ப்பு நிர்ணயிக்கப்படும் வரை 1ம் பிரதிவாதி செயலாளர் நாயகமாகச் செயல்படுவதையும், 1ம் இலக்கம் தொடக்கம் 13ம் இலக்கம் வரையுள்ள பிரதிவாதிகள் மத்திய கமிட்டி உறுப்பினர்களாகச் செயல்படுவதையும் இடைக்கால தடையுத்தரவு வழங்கி தடைசெய்யுமாறும்,

உ. 1ம் பிரதிவாதி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமாக செயற்படுவதையும் 1ம் இலக்கத்திலிருந்து 13ம் இலக்கம் வரையுள்ள பிரதிவாதிகள் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய கமிட்டி உறுப்பினர்களாக செயல்படுவதையும் இடைக்காலத் த்டையுத்தரவு கோரியுள்ள வாதிகளின் விண்ணப்பத்தின் பேரில் இறுதியான விசாரணை நடைபெற்று தீர்ப்பு நிர்ணயிக்கப்படும் வரை தடையுத்தரவு வழங்கப்பட வேண்டுமெனவும்.

ஊ. வழக்கினால் ஏற்படும் செலவினங்களுக்கும்,

எ. மதிப்பிற்குரிய நீதிபதியவர்கள் நியாயமானதெனக் கருதும் வேறு நிவாரணங்களுக்கும்.

இதனால் கூறப்படும் காரணங்களுக்காக குறித்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மீதும் வழக்குத் தொடரப்பட வேண்டியுள்ளது. இவ்விண்ணப்பத்தில் வாதிகள் 1வது 2ஆவது பிரதிவாதிகளை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரதிநிதிகளெனக் குறிப்பிட்டு அவர்கள் மீது வழக்குத் தொடரப் படவேண்டும் எனக் கோரியுள்ளார்கள்.

இதன்படி 2000ம் ஆண்டு பெப்ரவரி 22ம் திகதி நீதிமன்றம் தனது கட்டளைப் பிரகாரம் வாதிகளின் விண்ணப்பத்தை ஏற்று 1ம் இரண்டாம் பிரதிவாதிகள்மீது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரதிநிதிகளாக அன்று அவர்கள் மீது வழக்குத் தொடர அனுமதித்துள்ளது.

நீதிமன்றம் 2000ம் ஆண்டு பெப்ரவரி 22ம் திகதிய தனது கட்டளைப் பிரகாரம் இச்செயல்பாடு பற்றிய அறிவித்தல் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சகல உறுப்பினர்களுக்கும் பத்திரிகைகளில் ஒரு பகிங்க விளம்பர மூலம் தெரிவிக்கப்பட வேண்டுமென்று பணித்துள்ளது.

எனவே இந்த செயற்பாட்டின் மூலம் வாதிகள் மேற்குறிப்பிட்ட 1வது 2வது பிரதிவாதிகள் மீது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பிலும் அதனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும் வழக்குத் தொடுத்துள்ளார்கள் என்று அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

நீதிமன்ற கட்டளைப்படி
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம், கொழும்பு.

# குறுக்கெழுத்துப் போட்டி - 01

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ■ | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | ■ | 16 | 17 | 18 | 19 | ■ |
| 21 | 22 | 23 | ■ | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | ■ | 36 | ■ | 38 | 39 | 40 |
| 41 | 42 | 43 | 44 | 45 | ■ | 47 | 48 | ■ | 50 |
| ■ | 52 | ■ | 54 | 55 | 56 | ■ | 58 | 59 | 60 |
| 61 | ■ | 63 | 64 | 65 | ■ | 67 | ■ | 69 | 70 |
| 71 | 72 | 73 | 74 | ■ | 76 | 77 | 78 | 79 | 80 |
| 81 | 82 | 83 | ■ | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| 91 | 92 | ■ | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | ■ |

## இடமிருந்து வலம்

1. தானத்தில் சிறந்தது எனலாம். வெண்புறா தாங்கிவருமாம்.
7. அர்த்தம் தொலைந்துபோனால் இதனால் மிஞ்சுவது இரத்தம்.
11. இங்கே குழம்பிப்போயுள்ளது. இது குலைந்துபோனதினால்தான் இத்தனையும். உண்மையில் இதுவே பலம்.
25. குழம்பியுள்ளது. பல தடவைகள் கிழித்தெறியப்பட்டதனால்.
31. அரசருக்கு இவரது ஆலோசனை குழப்பத்தை ஏற்படுத்தக்கூடாது. இங்கு குழம்பியுள்ளது.
38. இதன் குணம் அறிந்துதான் இதற்கு கொம்பில்லையாம்.
41. குழப்பமில்லாமல் ஒன்றை விளங்கப்படுத்துவதற்கு இது அவசியம். இங்கே குழம்பியுள்ளது.
47. விலைவாசி உயர்ந்தாலும் "புளி" யோடு சேர்த்து இதை தினமும் சந்தையில் வாங்கியே ஆகவேண்டும்.
50. முக்கனிகளில் முதற்கனி.
54. இது ஒரு பெண்ணின் பெயர். ஆனால், அமலா அல்ல.
63. ஒவ்வொரு சோதனை சாவடிகளிலும் இந்த உணர்வு ஏற்படாத தமிழ் மக்கள் இல்லையென்றே கூறலாம்.
71. "கரணம் தப்பினால் மரணம்" என்பார்கள். நம்நாட்டில் காரணம் தப்பினாலே 'இது' ஆகும்.
76. தென்னாலி இராமனுக்கு வழங்கப்பட்ட பட்டத்தில் 'கவி' குழம்பியுள்ளது.
81. அச்சுக்கோர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் உலோகம். குழம்பியுள்ளது.
85. மாணிக்கவாசகரால் அருளப்பட்டது.
94. கொழும்பில் இதை உறுதிப்படுத்தி ஆவணங்கள் இருந்தபோதும், கைதுகளுக்கும் விசாரணைகளுக்கும் குறைவேயில்லை.

## மேலிருந்து கீழ்

1. சகல இன மக்களுக்கும் இந்த உரிமை சமமாக வழங்கப்பட்டிருந்தால் ...குழம்பியுள்ளது.
2. இன்றைய சகல பிரச்சினைகளுக்கும் சிறுபான்மை சமுகத்தவர்கள் இந்த மனோபாவத்துடன் நடத்தப்பட்டதும் ஒரு காரணம்.
3. மறுமணம் முடித்தவரின் மனைவியை இப்படி அழைப்பதுண்டு. குழம்பியுள்ளது.
7. காதலர் ஒருவரின் காத்திருப்பில் கணம் கூட இதுவாகத் தோன்றுமாம். சந்திப்பில் இது கணம் போலாகுமாம்.
8. மனிதர்கள் எல்லோர்க்கும் இருப்பதாகக் கட்டாயப்படுத்தி, ஆடுமாடுகளுக்கு இது இல்லை என்கிறார்கள். குழம்பக்கூடாத இது இங்கே குழம்பியுள்ளது.
9. பெரும் குழப்பத்தை ஏற்படுத்தும் இது இங்கே குழம்பி வருகிறது. விவேகமில்லாத இது தந்தியிலும் வேகமானது.
16. இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அரசியலில் இது திருத்தப்படுவதற்கு இனவாதிகளும், மாறிமாறி எதிர்க்கட்சியாய் வருபவர்களும் எப்போதுமே தடையாகவே இருந்து வந்துள்ளனர்.
30. இந்த மார்க்கத்தில் இலங்கையுடன் எந்த நாட்டுக்கும் தொடர்பில்லை.
34. திரைகடலோடியும் இதை தேடு என்றார்.
45. குழம்பியுள்ளது. பூவிலும் உண்டு.
59. இது விளக்கமாக இல்லாவிட்டால் குழப்பந்தான். இங்கேயும் குழம்பியுள்ளது. ஆசிரியர் பாடத்தை இப்படித்தான் சொல்வார்.
61. சமயம் பார்த்தே எதிலும் செயற்பட வேண்டும். மதம் என்பதற்கும் பொருந்துமிது குழம்பியுள்ளது.
63. குணம் குப்பையில்தான். இது பந்தியிலே.
67. அம்பாறை மாவட்டத்தில் பௌத்தர்களின் புனித பூமியாகப் பிரகடனப்படுத்தப்பட்ட இடம்.
72. சிலர் நெஞ்சில் இருக்காதது. கல்லிலும் இருக்குமாம். குழம்பியுள்ளது.

கீழுள்ள முகவரிக்கூப்பனை வெட்டி ஒட்டி தபாலட்டையில் மாத்திரமே எழுதி எதிர்வரும் 30ம் திகதிக்குள் அனுப்பிவையுங்கள்.

சரியான விடைகளை எழுதி பரிசு பெறும் அதிஷ்டசாலிக்கு ரூபா 200 அனுப்பி வைக்கப்படும்.
ஐந்து பேர் பாராட்டுப்பெற தேர்ந்தெடுக்கப்படுவர்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல:01**
**கண்ணோட்டம்**
**37/2, 1/1 விமலசார வீதி**
**களுபோவில, தெஹிவளை.**

படிப்பகம்

www.padippakam.com





## கண்ணோட்டம்

"நாம் மக்களுக்காகப் போராடுவதென்பது எம்மீது சுமத்தப்பட்ட கடமையே தவிர எமக்கு வழங்கப்பட்ட அதிகாரமல்ல"

No 37/2 - 1/1, Wimalasara Road, Kalubowila, Dehiwala

## எப்போதும் இரத்தத்தில் குளிர்காய நினைப்பவர்கள்

இனப்பிரச்சினை தீர்வு பற்றிய அபிப்பிராயங்கள் வலுவடைந்து வருகையில் இணக்கப்பாடு விட்டுக்கொடுப்பின் மூலம் அதிகாரப் பகிர்விற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகையில் பல பௌத்த பிக்குகளும் சிங்கள இனவாத அமைப்புக்களும் அதிகாரப் பகிர்வுக்கெதிராக குரல் எழுப்பி வருகின்றனர். ஆனால் யுத்த முனையிலுள்ள தமது பிள்ளைகளின் நிலை பற்றி கவலையடைந்துள்ள பெற்றோர்களும் உறவினர்களும், தெற்கில் மிக அதிகம் சமாதானம் இனப்பிரச்சினைக்கு நியாய பூர்வமான தீர்வு என்பதே இவர்களின் பெருவிருப்பாகும்.

இவர்கள் மாத்திரமல்ல, பெருவாரியான சிங்கள மக்கள் சமாதானத்திற்காக, அமைதிக்காக ஏங்குகின்றனர். ஆனால் திமிர் எடுத்துத் திரியும் சிங்கள வீர விதான, பூமிபுத்திர, சோபித தேரர் வகையறாக்களுக்கு மக்களின் துன்பங்களைப் பற்றி யுத்த முனையில் இறந்து கொண்டும் காயமடைந்து கொண்டும் இருப்பவர்களைப் பற்றி எந்த அக்கறையும் கிடையாது.

இந்த 2000தின் முற்பகுதியில் மக்களிடையே சமாதானத்திற்கான ஏக்கம் பரவலாகக் காணப்படுகையில் இந்தக் கோஷ்டிகள் யுத்தவெறி பிடித்தலைகின்றன. இனக்குரோதம், வன்முறையை வெறுக்கும் நவீன உலகின் இளந்தலைமுறையினருக்கு விசம் பாய்ச்சும் கோஷ்டிகளே இவை.

இந்த மாதிரியான சக்திகள், வளர்வதற்கான சூழ்நிலை எமது நாட்டில் காணப்படுகிறது என்பது துரதிஸ்டமான உண்மையாகும். ஆயுதங்களுடன் படைகளை விட்டோடியவர்கள் சமூகவிரோத சக்திகள் எல்லாம் இணைந்த பாதாள உலகக் கோஷ்டிகளே இந்த பேரினவாத சக்திகளுக்கு உறுதுணையாக இருக்கின்றன. புறக்கோட்டை வர்த்தகர்களை அச்சுறுத்தி அவர்கள் மீது தாக்குதல் தொடுத்த சக்திகளுக்கும் இந்த பேரினவாத சக்திகளுக்கும் சம்பந்தமில்லை என்று கூறமுடியாது.

இந்த இனவாத சக்திகள் வெண்ணெய் திரண்டு வரும் நேரம் தாழியை உடைப்பதற்குத் தயாராகின்றன. நல்லவை எதுவும் நடந்துவிடக்கூடாது, மக்கள் இணக்கப்பாட்டுக்கு வந்துவிடக்கூடாது. சமாதானம் வந்துவிடக்கூடாது என்பதே இச்சக்திகளின் பெருவிருப்பாகும். அவ்வாறு ஏதாவது நடந்துவிட்டால் தமது கடையை மூடவேண்டி வந்துவிடுமோ என இவை அஞ்சுகின்றன.

யுத்த சூழ்நிலையில் உருவாகிய ஒருவிதமான சமூக நோய்க்கிருமிகளே இவை. தமிழ் மக்களுக்கோ, முஸ்லீம் மக்களுக்கோ எந்தளவு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டாலும் அது நாட்டைப் பிரிக்கும் வேலை என்றே இவை கூறுகின்றன. சிங்கள மக்களின் நலன்களுக்காக இயக்கங்கள் உருவாகுவது வேறு விடயம்.

ஆனால் இந்த நாட்டின் எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழர்களையும், முஸ்லீம்களையும், கிறீஸ்த்தவர்களையும் இழிவாக நோக்கும் மிதித்தழிக்க நினைக்கும் சக்திகளை எந்த ஒரு தார்மீக உணர்வுள்ள மனிதனும் சகித்துக் கொள்ள மாட்டான். புத்தரின் போதனைகளுக்கும் இங்குள்ள பௌத்த துறவிகளுக்கும் உள்ள சம்பந்தம் என்னவென்பது தான் விளங்கவில்லை. முஸ்டியைஉயர்த்தி புயங்களைக் காட்டுவதில் அவர்களில்சிலர் பெருமை கொள்வது விசனத்தைத் ஏற்படுத்துவதாக இருக்கிறது.

இதேவேளை தமிழ் இனவாதமும் சிங்கள மக்களிடம் உள்ள நல்லவை எவற்றையும் காண்பதை மறுக்கிறது. பிரபலமான தமிழ் பத்திரிகைகள் சில எங்கே கூடாத விடயங்கள் இருக்கின்றனவோ அவற்றை மாத்திரமே பிரசுரிப்பதில் முண்டியடிக்கின்றன.

தமிழர்கள் மத்தியில் தாம் உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்கள் என்பதைவிட தம்மைப் பற்றிய சுய பரிதாபமும் காணப்படுகின்றது. எமக்கு நேர்ந்த கொடூரங்கள் மற்றவர்களுக்கு நேர்ந்தால் எமக்கு அது ஒரு பொருட்டேயல்ல. தன்னைப் போல் பிறரையும் நேசி என்பது எமது சமூகத்தைப் பொறுத்தவரை மருந்துக்கும் இல்லாத விடயமாக மாறிவருவது ஒரு கசப்பான உண்மையாகும். பரந்த நோக்கில்லாது குண்டுச்சட்டிக்குள் வாழும் போக்கு எமது சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவாதென்பது உறுதியானது. எம்மைவிட மற்றெல்லோரும் கொடியவர்கள் அல்லது இழிவானவர்கள் என்ற மமதை எமது சமூகத்தின் அழிவை அதிகரிக்கச் செய்யும்.

20 வருட யுத்த சூழ்நிலையானது இரக்கம், மனிதாபிமானம், பரந்த மனோபாவம் ஆகியவற்றை அழித்து விட்டது குறுகிய மனோபாவம் கொண்ட இராணுவ மற்றும் அரசியல் சக்திகளும் அவ்வாறான மனோபாவம் வளர்வதில் பங்காற்றியிருக்கின்றன.

இந்த மாய வலையிலிருந்து தமிழ்ச் சமூகம் வெளிவரவேண்டும்.

## உண்மைகள் உறங்குவதில்லை

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆரம்பகால உறுப்பினரான நான் எமது கட்சிக்குள் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக, பிரச்சினைகள் களையப்பட்டு அனைத்துத் தோழர்களும் ஒரே அணியில் செயற்படுவதே கட்சிக்கும், மக்களுக்கும் பலமாக இருக்கும் என்ற கருத்தையே பிரச்சினையின் ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தி வந்தேன்.

ஆனாலும் கட்சிக்குள் சரியான கருத்தைக் கொண்டிராத, பரந்த நோக்கமற்ற, குறுகிய சிந்தனைக் கொண்ட சிலரின் செயற்பாடுகள் கட்சியின் ஒற்றுமையையும், கட்சியின் நற்பெயரையும் சீரழித்துவிடும் என்று அவ்வப்போது நெற்றிக்குநெரே சுட்டிக்காட்டியும் வந்தேன்.

திரு.அ. வரதராஜபெருமாள் அவர்களை இடைநிறுத்துவது தொடர்பாக சுரேஸ் குழுவினரால் திருமலையில் நடாத்தப்பட்ட கூட்டத்தில் ஒரு மத்தியகமிட்டி உறுப்பினரை இடைநிறுத்துவதற்கான அதிகாரம் அக் கூட்டத்துக்கு இல்லையென்றும் கட்சியின் பெரும்பான்மையான தோழர்களும், மத்தியகுழு உறுப்பினர்களும் சில பிராந்தியங்களிலிருந்து இக் கூட்டத்தில் கலந்துக் கொள்ளவில்லையென்றும் கட்சி தொடர்ந்தும் பிரச்சினையை நோக்கி செல்லுவதற்கும் இக்கூட்டம் வழிவகுக்கிறதென்றும் வலியுறுத்தினேன்.

அதன் பின் சுரேஸ் குழுவினரால் வவுனியாவில் நடைபெற்ற காங்கிரஸ் என கூட்டப்பட்ட கூட்டத்தில் கட்சி மரபுகளையும், கட்சியின் யாப்பு விதிமுறைகளையும் மீறும் பொருட்டு பல நூற்றுக்கணக்கான தோழர்களைப் புறக்கணித்துவிட்டு நடத்த முற்பட்டதால் இக்கூட்டத்தில் கலந்துக் கொள்ளுவதில்லையென்று முடிவெடுத்திருந்த போதும் வற்புறுத்தலின்பேரில் பங்குபற்ற வேண்டியதாயிற்று.

அக்கூட்த்தில் எனது எண்ணப்பாடுகளை கூறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்பது தான் உண்மை. மாறாக நானும் அக்கூட்டத்தில் பங்கு பற்றினேன் கொண்டேன் என்பதற்காக எனக்கு மத்தியகுழு உறுப்பினர் பதவி வழங்க முன்மொழியப்பட்டது. அதை நிராகரித்த நான் பத்மநாபாவின் கொள்கையின் அடிப்படையில் வந்தவனென்றும், எனக்கு இப்படியான ஒரு பிழையான முறையில் வழங்கப்படும் பதவியோ பொறுப்போ தேவையில்லை என்றும் மறுதலித்து விட்டேன். இக்கூட்டத்தின் பின் இக்குழுவினருக்கு ஆதரவளிப்பதில்லை என்று உறுதியான முடிவெடுத்தேன்.

எனது முடிவு இவர்களுக்கு சாதகமாக இல்லாததால் எனக்குத் தொல்லைகள் தர முற்பட்டார்கள். இவர்களுடன் இருந்த கருத்து முரண்பாடு காரணமாக இருபதுக்கு மேற்பட்ட தோழர்கள் தங்கள் பக்கமுள்ள நியாயத்தை நிலைநாட்ட வவுனியா குருமண் காடு பகுதியில் கட்சிக் காரியாலயத்தை திறந்த போது மக்களைப் பதற்றத்துக்கு உள்ளாக்கும் வகையி

**அன்ரனி இம்மானுவேல் சில்வா**
**முன்னாள் பா.உ., வன்னி**

லும் உண்மைக்குப் புறம்பான முறையிலும் ராசிக்குழு குடிகொண்டுள்ளது என்றும், ஆயுதபாணிகள் நடமாட்டம் என்றும் இராணுவத்துக்கு ஆள் பிடிக்க வந்துள்ளார்கள் என்றும் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டதோடு சுவரொட்டிகளையும் ஒட்டி திரு.அ. வரதராஜபெருமாளின் கொடும்பாவியை வெளிவட்ட வீதியில் எரித்து உண்மைக்கு களங்கம் ஏற்படுத்தி தமது பொய்களில் குளிர் காய்ந்தார்கள். இது தொடர்பாக சுரேஸ் குழுவினர் பழைய மத்தியகுழு உறுப்பினர்களான லிங்கேஸ்

தொடர்ச்சி 11ம் பக்கம்

## கட்டளை

### கொழும்பு மாவட்ட நீதிமன்றம்

**வழக்கு இல:- 5578/SPL**

**வாதிகள்**

1. திரு. தம்பிராஜா சுபத்திரன்
இல:- 37/2 விமலசார றோட்
களுபோவில, தெகிவளை.

2. திரு. இராசையா துரைரட்ணம்
இல:- 29, லேக் றோட்-1
மட்டக்களப்பு.

3. திரு. திருநாவுக்கரசு சிறீதரன்
இல:- 37/2 விமலசார றோட்
களுபோவில, தெகிவளை.

4. திரு. நாகராஜா. நேசராசா
இல:- 29, லேக் றோட் -1
மட்டக்களப்பு.

5. திரு.கந்தையா சிவராசா
இல:- 310, ஆஸ்பத்திரி றோட்
யாழ்ப்பாணம்.

**எதிர்**

1.திரு.கந்தையா பிரேமச்சந்திரன்
அல்லது சுரேஷ்
இல:- 24, சமிட் தொடர்மாடி
கெப்பிட்டிபொல றோட்
கொழும்பு-5.

2. திரு. தர்மராஜா வில்சன்
எவ் 1/1 காலி றோட்
தெகிவளை. அத்துடன்
97/2 வைத்யா றோட்
தெகிவளை.

3. திரு. நடராஜா அலெக்சாண்டர்
ஜெயக்கொடி
அல்லது சோமு
497/1 ஹவ்லொக். றோட்
கொழும்பு-5.

4.திரு.துரைராஜா லிங்கேஸ்வரன்
அல்லது ஏஜிஏ
இல:-22, வெளிவட்ட றோட்
வவுனியா.

5. திரு. கதிரிப்பிள்ளை அருந்தவராஜா
BERGEDER WEG – 9
59494 SOEFT
ஜேர்மனி.

6. திரு நடேசு சிவசக்தி
அல்லது ஆனந்தன்
இல:- 22 வெளிவட்ட றோட்
வவுனியா.

7. திரு. சம்பூர்ணம் இரத்தின
சிங்கம் அல்லது குமரேஸ்
உப்புக்குளம் றோட்
மன்னார். அத்துடன்
இல:- 22, வெளிவட்ட றோட்
வவுனியா.

8.திரு.அந்தோனி அருள்ராஜசே
கரன் அல்லது சாந்தன்
இல:- 22, வெளிவட்ட றோட்
வவுனியா.

9. திரு பூபாலபிள்ளை ரவீந்திர
ராஜா அல்லது அசோக்
இல:- 22 வெளிவட்ட றோட்
வவுனியா.

10.திரு கதிர்காமத்தம்பி ரகுநாதன்
அல்லது ரகுமாஸ்டர்
இல:- 54, மாணிக்கவாசகர் றோட்
திருகோணமலை.

11.திரு. கந்தசாமி பாலநடராஜா
அல்லது ஐயர் அத்துடன் ஐயர்பாலா
497-1 ஹவ்லொக் றோட்
கொழும்பு-5.

12. திரு. தம்பிப்பிள்ளை ஜெயாஸ
பரன் அல்லது ஈஸ்வரன்
இல:- 22 வெளிவட்ட வீதி
வவுனியா.

13.திரு சின்னசாமி ஈஸ்வரதாஸன்
அல்லது திலீப்
இல:- 54 மாணிக்கவாசகர் றோட்
திருகோணமலை.

**பிரதிவாதிகள்**

22 திகதி பெப்ரவரி 2000 ஆன இன்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அங்கத்தவர்கட்கு,

1ம், 2ம் பிரதிவாதிகளுக்கு எதிராக வாதிகளால் பின் கூறப்படும் முறைப்பாடு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்ற அமைப்பின் உறுப்பினர் என்ற முறையிலும் பதவி வகிப்போர் என்ற முறையிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அ. 2000 ஆண்டு ஜனவரி மாதம் 13ம் 14ம் திகதிகளில் வேண்டுமென்றே திட்டமிடப்பட்டு கூட்டப்பட்ட காங்கிரஸ் செயலமர்வு சட்டப்படி செல்லுபடியற்றது என்று தீர்ப்பளிக்கும்படியும், முன் குறிப்பிட்ட அட்டவணைப்படி 1ம் பிரதிவாதி செயலாளர் நாயகமாகவும், 1ம்- 13ம் வரையுள்ள பிரதிவாதிகள் மத்திய கமிட்டி அங்கத்தவர்களாகவும் தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியற்றதென்றும் அத்துடன் அதிகாரமற்றதுவும் சட்டப்படி வலுவற்றதென்றும் தீர்ப்பளிக்கும்படியும்,

ஆ. 1ம் இலக்கம் தொடக்கம்13ம் இலக்கம் வரையுள்ள பிரதிவாதிகளால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், பதவி நியமனங்கள் செல்லுபடியற்றவையென்றும் அவை செயற்படுத்தப்பட முடியாதவையென்றும் தீர்ப்பளிக்கும்படியும்,

தொடர்ச்சி 11ம் பக்கம்

படிப்பகம்